# சமூகசேவையாளர் கௌரவிப்பு சிறப்பிதழ்



11.03.2017

கோறளைப்பற்று
சமூகநல மேம்பாட்டு அமைப்பு
வாழைச்சேனை

KP 33

## ஆசிரியரின் உள்ளத்திலிருந்து...

எமது கோறளைப்பற்று பிரதேசத்தின் கலை, கலாசார, பண்பாட்டு, பொருளாதாரம், விளையாட்டு என பல்துறை சார்ந்து எமது சமூகத்தின் ஆணி வேர்களாக இருந்து சமூகப் பணியாற்றிய சமூகசேவையாளர்களை கௌரவிக்க, பாராட்ட வேண்டும் என்ற எண்ணத்தின் வெளிப்பாடே இந்நூல்.

'வாழும் போதே வாழ்த்த வேண்டும்' என்ற சிந்தனையின் அடிப்படையில் 12 கிராமசேவகர் பிரிவுகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 30 சமூகசேவையாளர்கள் முதற்கட்டமாக கௌரவிக்கப்படவுள்ளனர். அவர்களது சமூகசேவையை கௌரவப்படுத்தும் சிறப்பு நூல் ஒன்றும் எம்மால் வெளியிடப்பட்டுள்ளது. எம்மால் தெரிவு செய்யப்பட்டவர்கள் துறை சார்ந்து சமூகத்திற்காக அர்ப்பணிப்பான சேவையை வழங்கியவர்கள் என்பதில் மாற்றுக்கருத்துக்கள் இருக்க முடியாது என்பது என் எண்ணம்.

இப் பாராட்டுவிழா வெறுமனே சமூகசேவையாளர்களை கௌரவப்படுத்துவது மட்டுமல்ல அப்பால் அவர்களது சேவை தொடர்பில் இளம் சமுதாயத்திற்கு அறிவூட்ட வேண்டும். அதனூடாக தமிழர் சமூகம் சார்ந்த பண்பாடு, கலை, கலாசாரம் பற்றிய அறிதல் உள்ள இளம் பரம்பரையினை உருவாக்க வேண்டும் என்பதே என் அவா.

தற்போது சமூகசேவையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற இளம் சமுதாயத்தையும் கௌரவிக்க வேண்டும் என்ற நினைப்பும் எழாமலில்லை.

**விரைவில் சந்திப்போம் என்ற நம்பிக்கைகளுடன்.....**



**க.கமலநேசன்**

# வாழ்த்துரை

கோறளைப்பற்று வாழைச்சேனையிலிருந்து சமூக சேவையாளர்களை கௌரவித்து சிறப்பு நூல் வெளிவருவது சந்தோசத்தை தருகிறது. பிரதேசத்தின் புத்தக வெளியீடுகள் வராதா? என்ற பலரது தாகத்திற்கும் ஒருமித்து சமூகப்பணியாற்றியவர்களை கௌரவிப்பதும் இலேசான விடயம் அல்ல இவ்விழாக் குழுவிற்கு முதலில் எனது பாராட்டுக்கள்.

இவ்வாறான விழாக்களை ஒழுங்கு செய்வதும், கலை நிகழ்வுகள், புத்தக வெளியீடுகள், தமிழர் கலை, கலாசார வாழ்வியல், பாரம்பரியங்களின் ஆணி வேர்களை தேடும் முயற்சிகள் மந்தகதியில் நடைபெறுவது கவலையளிக்கிறது. இவ்வாறான மனோ நிலையிலிருந்த எமக்கு சமூக சேவையாளர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வானது சற்று ஆறுதலைத் தருகின்றது.

இருப்பினும் இவ்வாறான சமூகம் சார்ந்து இயங்குபவர்களை விமர்சிப்பதும் , எந்த நிகழ்வையும் வெறுமனே விமர்சன ரீதியாக மட்டும் பார்க்கும் 'ஒருசாரார்' சமூக இயங்கு தளத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இன்றைய இளம் தலைமுறையினர் சமூகம் சார்ந்து சிந்திக்கின்ற நிலை அருகி வருகிறது. நவீன தொழிநுட்பத்தின் வளர்ச்சி, சினிமா, சின்னத் திரைகளின் தாக்கம், அன்றொய்ட் தொலைபேசிகளின் வருகை ஒருவகையான மாயவலைக்குள் இளசுகளை கட்டிப் போட்டிருப்பதாய்த்தான் நான் உணர்கிறேன்.

இவ்வாறான நிகழ்வுகள் இளம் சமுதாயத்தினரை சமூகம் சார்ந்தி சிந்திக்க வைப்பதற்கும், நம் மூதாதையர்கள் சமூகம் சார்ந்தும் பணியாற்றியிருக்கிறார்கள், அவர்களது அருமை, பெருமைகளை உணர்ந்து கொள்வதற்கான நல்ல சந்தர்ப்பமாகவும் அமையும் என்பதில் மாற்றுக்கருத்துக்கள் இருக்க முடியாது. பாராட்டுப் பெறுபவர்கள் அவர்களது காலச் சூழலில் எத்தனை சவால்களை சமாளித்து பணியாற்றியிருக்கிறார்கள் என்பதை இந்த சிறப்பு நூல் வெளிக்கொணர்ந்துள்ளது. நல்ல முயற்சி , பாராட்டுக்கள், தொடரட்டும்

க.ஜெகதீஸ்வரன்
சமூகசேவை அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம், கோறளைப்பற்று, வாழைச்சேனை

## அமரர்.திரு.முருகேசு தவராஜா
### கல்வி, சமூக, எழுத்தாளர் சேவை



கல்வி, சமூகம், எழுத்து, பண்பாடு என பல்வேறு துறைகளில் பல்வேறு சேவைகளைச் செய்த மாபெரும் மனிதராகப் பார்க்கப்படுகின்ற சிறந்த மனிதரே முருகேசு தவராஜா அவர்கள்.

வாழைச்சேனை பேத்தாழைக் கிராமத்தைச் சேர்ந்த முருகேசு -வள்ளியம்மை தம்பதியினருக்கு மகனாக 1950.03.18ஆம் திகதி பிறந்தார். இவர் சிறுவயது முதலே கல்வியிலும், ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கினார். அப் பண்பே இன்றுவரை அவரை சிறந்த மனிதனாகப் பார்க்கச் சொல்கின்றது. இன்று அவர் உயிருடன் இல்லாவிட்டாலும் நிகழ்கால, எதிர்கால மனிதர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாகவே இவரின் வாழ்க்கையை நோக்க வேண்டியுள்ளது.

சிறந்த மனிதரான இவர் 1956 தொடக்கம் 1960 வரை வாழைச்சேனை கனிஷ்ட வித்தியாலயத்தில் (இந்துக் கல்லூரியில்) ஆரம்பக் கல்வியையும், 1961-1968 வரை மட்/வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் இடைநிலைக் கல்வியையும் கற்றார். பரீட்சையில் சித்தியடைந்த அவர் கல்விப் பொதுத் தராதர உயர்தரத்தில் வர்த்தகப் பிரிவில் கல்வி கற்று பல்கலைக் கழகத்திற்குத் தெரிவானார். யாழ் பல்கலைக் கழகத்தில் வியாபார நிருவாக விஞ்ஞானமாணிப் பட்டதாரியானார்.

இவர் சிறந்த குடும்பத் தலைவராகவும் விளங்கினார். பேரின்பநாயகியைத் தனது துணைவியராக இணைத்து மூன்று பிள்ளைகளின் தந்தையானார். தன் பிள்ளைகளை நன்னிலைக்கு இட்டுச் சென்றது போலவே தன்னிடம் கல்வி கற்ற அனைத்து மாணவர்களின் வாழ்க்கைக்கும் ஒளியூட்டினார்.

இவர் ஆசிரியத் தொழிலுக்கு வரும் முன் வாழைச்சேனை காகித ஆலையில் ஊழியராகக் கடமையாற்றினார். கடமையாற்றும் காலத்திலேயே ஆங்கிலத்தில் பாடநெறியைத் தொடர்ந்து ஆங்கிலத்தில் சிறந்த ஆளுமையுள்ளவராக மாறினார். அதைத் தொடர்ந்து 1986ஆம் ஆண்டு ஆங்கில ஆசிரியராகத் தனது ஆசிரியத் தொழிலைத் தொடங்கினார். 1986 இல் இருந்து 1995 வரை ஆசிரியராகப் பணி புரிந்து 1995இல் அதிபராகப் பதவி உயர்வு பெற்று வாழைச்சேனை இந்துக்கல்லூரிக்கு அதிபரானார். இங்கு நீண்ட காலம் பணியாற்றிய பின் கரடியனாறு மகா வித்தியாலயத்திலும் அதிபராக் கடமையாற்றியதன் பின்பு 2007.03.18இல் இருந்து ஓய்வு பெற்றார்.

மு.தவராசா அவர்கள் கல்வியில் மட்டுமன்றி எழுத்தாற்றலிலும் தன்னை நிலை நிறுத்திக் கொண்ட ஓர் மனிதர். அந்த வகையில் கல்வி கற்கும் காலத்தில் இருந்தே எழுத்தாற்றல் மிக்கவராக விளங்கினார். இவருடைய முதலாவது சிறுகதைத் தொகுப்பு "மறைமுகம்" 2003 இல் வெளிவந்தது. அடுத்த தொகுப்பாக 2005இல் "மறுபக்கம்" வெளிவந்தது. இவருடைய நூல்கள் வெளிவருவதற்கு அவருடன் நெருங்கிப் பணியாற்றியவர்கள் சிறந்த பங்களிப்பைச் செய்துள்ளனர்.

வாழைச்சேனை இந்துக்கல்லூரியில் 1992, 1997 காலப்பகுதியில் அச்சு உருவில் வந்த 'செவ்வாழை' இதழ் அதன் பின் அச்சுருப் பெறாமல் தடைப்பட்டது. மீண்டும் மு.தவராசா அதிபரின் முயற்சியால் 2005ஆம் ஆண்டில் இப் பாடசாலையில் தமிழ் இலக்கிய மன்றம் ஆரம்பிக்கப்பட்டு 'மகூலம்' என்ற சஞ்சிகை வெளிவந்தது.
மேலும் இவரின் சேவை தொடர்ந்து கொண்டே சென்றது. தனது பதவியிலிருந்து ஓய்வு பெற்ற இவர்,

- வடக்கு, கிழக்கு புனருத்தாரணப் பயிற்சியும், ஆராய்ச்சியும் என்ற அரச சார்பற்ற நிறுவனத்திலே செயற்றிட்ட இணைப்பாளராக,
- வாழும் கலை உறுப்பினராக,
- மட்டக்களப்பு தமிழ் சங்கத்தின் உப தலைவராக,
- வாழைச்சேனை தமிழ் கலை, இலக்கிய மன்றத்தின் தோற்றுவிப்பாளராக,
- சமூக, இலக்கிய சொற்பொழிவாளராக,
- ஸ்ரீ கைலாயப்பிள்ளையார் ஆலயத்தின் தலைவர்

என்று பல்வேறு சமூக அமைப்புக்களிலும், நிறுவனங்களிலும் பல பொறுப்புக்களை வகித்து சமூக முன்னோடியாகவே திகழ்ந்தார். இவ்வாறாக சமூக, கல்வி, பண்பாட்டு, கலை நிகழ்வுகளுக்கும், எழுத்துலகிற்கும் இவர் அளப்பரிய சேவையாற்றியுள்ளார்.

மேலும் மட்டக்களப்பு சமூக விழிப்புணர்வு மன்றம் அன்னாரின் கல்விச் சேவையைப் பாராட்டி கௌரவித்தது. மட்/வாழைச்சேனை இந்துக் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் 2016ஆம் ஆண்டு பாராட்டு விழா நடாத்திக் கௌரவித்தனர்.

அத்துடன் 2004ஆம் ஆண்டு உயர்தர மாணவர்களால் கௌரவம் வழங்கப்பட்டது. பல கௌரவங்களையும் தனதாக்கிக் கொண்ட சமூகச் செம்மல் இன்று எங்கள் மத்தியில் இல்லாவிட்டாலும் இப்போதும் சிறந்த மனிதனாகவே வாழையூர் கல்விச் சமூகம் அவரைப் பார்க்கின்றது. அன்னாரின் ஆத்ம சாந்திக்கு இறைவனைப் பிரார்த்தித்து இச் செம்மலை இன் நிகழ்வில் நினைவு கூர்ந்து கௌரவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றோம்.

## திரு.சின்னத்தம்பி தட்சணாமூர்த்தி
### - வைத்தியர், சமூகசேவையாளர்-



சின்னத்தம்பி-செல்லத்தங்கம் தம்பதியினருக்கு 04.11.1950ஆம் ஆண்டு ஐந்தாவது பிள்ளையாகப் பழுகாமத்தில் பிறந்தார். இவர் ஓர் சாதாரண குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர். ஆரம்பக் கல்வியைப் பழுகாமம் மகாவித்தியாலயத்திலும் (மட்/பழுகாமம் கண்டுமணி மகா வித்தியாலயம்), உயர் கல்வியை வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயம், பட்டிருப்பு மகா வித்தியாலயம், சிவானந்தா வித்தியாலயம் ஆகியற்றில் கற்றார். கிராமச் சூழலில் வாழ்ந்ததனால் தனது தந்தையாருக்கு உதவியாகக் கமம் செய்வதிலும் ஈடுபட்டார். தரம் எட்டில் கல்வி கற்கும் போது பொது விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியர் கண்டித்ததனால் கிட்டத்தட்ட ஒன்றரை மாதங்கள் பாடசாலை செல்வதற்கு மறுப்புத் தெரிவித்து மீண்டும் தனது தந்தையின் கண்டிப்பான உத்தரவின் காரணமாகப் பாடசாலைப் படிப்பைத் தொடர்ந்தார். சிவானந்தா வித்தியாலயத்தில் உயர்தரம் கற்ற இவர் இப்பாடசாலையில் இருந்தே மருத்துவக் கல்லூரிக்குச் சென்றார். தனது பொருளாதார நிலைமை காரணமாக அவர் ஒரு டாக்டர் பட்டம் எடுப்பார் என நினைத்திருக்கவில்லை. ஆனாலும் அவர் அதை சாதித்துக் காட்டியுள்ளமை எமது எதிர்காலச் சந்ததியினருக்கு ஓர் படிப்பினையாக இருக்க வேண்டும்.

1977 தேர்தலின் பின்பு அவருக்குக் கிடைக்கவிருந்த ஓர் தொழில் கிடைக்காத காரணத்தினாலும், சில நண்பர்களின் நடத்தைகளினாலும் மனவேதனையடைந்து இருந்த இவர் மீண்டும் படித்து மருத்துவக் கல்லூரிக்குத் தெரிவானார். யாழ் பல்கலைக்கழகத்தில் 1980 இல் பிரவேசித்த அவர் ஓர் M.B.B.S பட்டதாரியாக வெளியேறினார்.

இவர் ஆரம்பத்தில் மட்டு. பொது வைத்தியசாலையில் தற்காலிக விடுதி வைத்தியராகக் கடமையாற்றினார். பின்பு உள்ளகப் பயிற்சியைப் பெற்றுக் கொண்ட அவர் தொடர்ந்தும் மட்டு. பொது வைத்தியசாலையில் கடமையாற்றினார். அதைத் தொடர்ந்து 1991.05.24இல் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு மாவட்ட வைத்திய அதிகாரியாக நியமனம் பெற்று வந்தார். இவரது வைத்திய சேவையில் முக்கிய பங்கு கிட்டத்தட்ட 80% வாழைச்சேனை வைத்திய சாலையிலேயே கழிந்தது.

வாழைச்சேனைப் பிரதேசத்தில் யுத்த காலப் பகுதியில் தனித்து நின்று தனது சேவையை இவர் நல்லபடியாக நிறைவேற்றியதோடு, 1998ஆம் ஆண்டு காலப் பகுதி வரை முறக்கொட்டான்சேனை தொடக்கம் கதிரவெளிப் பிரதேசம் வரை ஒரே ஒரு வைத்திய உத்தியோகஸ்தராகத் தனித்து நின்று கடமை புரிந்துள்ளார். அதுமட்டுமன்றி தடுப்புப் பிரிவிற்கான (MOH) சுகாதார வைத்திய அதிகாரியாகவும் எதுவித மேலதிக கொடுப்பனவும் இன்றி தமது கடமையைத் திறம்படச் செய்துள்ளார். இவரின் சேவைக்கு ஓர் எடுத்துக்காட்டாக பின்தங்கிய பிரதேசத்தில் ஒருவரின் தலையில் இரத்தக் கசிவு ஏற்பட்டிருந்த நிலையில் மர நிழலில் சத்திர சிகிச்சைக்குட்படுத்தி அதனை அகற்றி அந் நோயாளியின் உயிரைப் பாதுகாத்த துணிவான மருத்துவ சேவையை எடுத்துக் காட்டலாம். வடமுனை, ஊத்துச்சேனை போன்ற பிரதேசங்களிலும் இவர் தனது சேவையை யுத்த காலப் பகுதியிலும் திறம்படச் செய்துள்ளார்.

தட்சணாமூர்த்தி அவர்கள் வழைச்சேனை வைத்தியசாலையில் தனது கடமையைப் பொறுப்பேற்கும் போது ஆறு தாதி உத்தியோகத்தர்கள் மட்டுமே இருந்தார்கள். இவர்களைக் கொண்டே வெளி நோயாளர் விடுதி, பிரசவ விடுதி, சிறுபிள்ளைகள் விடுதி, ஆண்/பெண் வைத்தியப் பிரிவு சிகிச்சை விடுதி போன்றவற்றை நிர்வகித்தார். அப்போது ECG, X-Ray வசதிகள் இருக்கவில்லை. அத்துடன் ஆய்வுகூட வசதியில்லை, ஆஸ்துமாவிற்கான நேபுலைன் உபகரணங்கள் இல்லை, இரத்த வங்கி, சத்திரசிகிச்சைக் கூடம், விசேட வைத்திய நிபுணர்கள் X-Ray, ECG இயக்குனர்கள் இல்லை, போதிய விடுதி வசதி போன்றவைகள் இல்லாமல் இருந்தது. இன்று இவரின் முயற்சியின் காரணமாக இவை யாவற்றையும் கொண்ட வைத்தியசாலையாகத் தரம் உயர்த்தியுள்ளமை பாராட்டுக்குரியவையாகவே கருதப்பட வேண்டியுள்ளது.

1993 காலப் பகுதியில் மு.ப 6 தொடக்கம் பி.ப 6 வரையே நோயாளர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவர். அக் காலப்பகுதியில் சூழ்நிலை காரணமாக பி.ப 6 மணிக்குப் பின்னர் நோயாளிகளை அனுமதிக்க முடியாத காரணத்தினால் பெரும்பாலான ஆஸ்துமா நோயாளர்கள் இன்னும் பல நோய்களுக்குட்பட்ட நோயாளர்கள் பல அசௌகரியங்களை எதிர்கொண்டதால் பல்வேறு தொண்டு நிறுவனங்களிடமும், காகித ஆலையிடமும் இருந்து உதவி பெற்று மருத்துவ உபகரணங்களை வாங்கி நோயாளர்களின் உயிர்களைப் பாதுகாத்த ஓர் வைத்தியராக இவர் காணப்படுகின்றார்.

இவருடைய சேவையை மேலும் நேர்க்கினால் இற்றைவரை 500 இற்கும் மேற்பட்ட பிரேத பரிசோதனைகளை இவர் மேற்கொண்டுள்ளார்.

இவருடைய காலப் பகுதியில் ஒரு பிரேதத்தை தவிர வேறு எந்த பிரேதங்களையும் மட்டக்களப்புக்கோ, கொழும்புக்கோ கொண்டு செல்லாமல் வாழைச்சேனையில் வைத்தே உறவினர்களிடம் ஒப்படைத்தமை அவரின் வைத்திய தொழிலுக்கு சான்று பகர்வதாகவுள்ளது.

வைத்தியர் தட்சணாமூர்த்தி அவர்கள் எமது வாழைச்சேனைப் பிரதேசத்தில் எத்தனையோ குழந்தைகளின் பிரசவத்தைச் செய்துள்ளார். ஆனால் தனது சொந்தக் குழந்தைகள் பிறப்பை அவரால் பார்க்க முடியவில்லை என்று கூறுகின்றார். காரணம் தனது குடும்பம், சொந்தம், பிள்ளைகள், எல்லாவற்றுக்கும் மேலாக தமது வைத்திய தொழிலையும் எமது பிரதேச மக்களையும் நேசித்தமையே. வைத்திய தொழிலால் எல்லோர் மனதிலும் நீங்காத இடம் படித்தவர். சகோதர இனத்தவர்களையும் மனிதம் என்ற ரீதியில் இன, மத, சாதி பேதங்களுக்கு அப்பால் மனித உணர்வுகளுக்கு மதிப்பளித்து தனது வைத்திய கடமையை செவ்வனே நிறைவேற்றியவர்.

யுத்த காலத்தில் தன்னை அர்ப்பணித்து தனது சேவையை திறம்பபட செய்துள்ளார். மயிலந்தனை படுகொலை சம்பவத்தில் பிரேத பரிசோதனையை தனது உயிரை துச்சமாக மதித்து நடத்தியிருந்தார். அதே போன்று இராணுவத்தினர் அழைக்கும் போதெல்லாம் கஸ்டப் பிரதேசங்களுக்குச் சென்று பிரேத பரிசோதனைகளைச் செய்துள்ளார்.

இவ்வாறு பல்வேறுபட்ட தனது கடமைகளுக்கு அப்பால் சமூகத்தையும் மனிதத்தையும் நேசித்து பிரதேச மக்களுக்கு வைத்திய சேவை செய்தவரை எமது சமூகம் என்றும் நினைவில் வைத்திருக்கும். இவர் இறுதியாக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் இருந்து ஓய்வு பெற்றுச் சென்றாலும் இவரின் வைத்திய சேவையை எமது பிரதேச மக்கள் இன்னும் எதிர்பார்க்கின்றனர் என்பது மட்டும் நிஜம். இவருக்கான தேகாரோக்கியம், நீண்ட ஆயுளை இறைவன் அருள வேண்டும் என்பதோடு வைத்தியரின் சேவையைப் பாராட்டி கௌரவிப்பதில் நாம் பெருமையடைகின்றோம்.

## திரு.தாமோதரம்பிள்ளை இராசநாயகம்
### - ஓய்வு பெற்ற அதிபரும், சமூகசேவையாளரும் -



வாழைச்சேனை பேத்தாழைக் கிராமத்தைச் சேர்ந்த திரு.க.தாமோதரம்பிள்ளை – தங்கம்மா தம்பதியினருக்கு 06.01.1945ஆம் ஆண்டு மகனாக தா.இராசநாயகம் அவர்கள் பிறந்தார். சமூகசேவையாளரான இவர் ஓர் சிறந்த கல்விமானும் ஆவார். இவர் பேத்தாழைச் சமூகத்தை கல்வியின்பால் இட்டுச் செல்வதற்குப் பெரும் பணியாற்றியுள்ளார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை பேத்தாழை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கற்றார். அதன் பின்பு தனது உயர் கல்வியை வாழைச்சேனை தமிழ் மகா வித்தியாலயத்திலும் (மட்/ககு/இந்துக் கல்லூரி), வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்திலும் கற்றார்.

கல்வியில் சிறந்து விளங்கிய இவர் தனது சமூகத்திற்கான கல்வியை வழங்குவதற்கும், அச் சமூகத்தைக் கல்வியில் முன்னேற்றுவதற்கும் தனிப் பெரும் சக்தியாக நின்று உழைத்த ஒரு மாமனிதர் என்றே கூற வேண்டும். அமைதியும், தன்னடக்கமும் நிறைந்த இம் மனிதரிடம் கல்வி கற்ற அனேகமானவர்கள் இன்றும் உயர் பதவி வகிப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

மாணவ ஆசிரியராக 1968இல் கல்குடா C.C.T.M.S இல் சேர்ந்து தனது கடமையை சரிவரச் செய்து கொண்டிருக்கும் போது தனது வாண்மைத்துவத்தை அதிகரிப்பதற்காக 1970, 1971 காலப்பகுதியில் மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையில் ஆசிரிய பயிற்சியைப் பெற்றுக் கொண்ட இவர் 1972 தொடக்கம் தனது மாவட்டத்திற்கு வெளியில் சென்றும் சேவையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அப்பிரதேசத்திலும் தனது சமூகப் பணியைச் சிறப்பாக மேற்கொண்டார். அப்பிரதேச மக்களுடன் அன்னியோன்யமாகப் பழகி அம்மக்களை தன்பால் கவர்ந்து கல்வியைக் கசப்பின்றிக் கற்பித்தார். இதன் காரணமாக அப்பிரதேச மக்கள் இன்றுவரை நினைவு கூருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

1972 தொடக்கம் பண்டாரவளை லியன்விநகாவெல தமிழ் கலவன் பாடசாலை, சென்மேரிஸ் தமிழ் மகா வித்தியாலயம், கொஸ்லந்தை தமிழ் மகா வித்தியாலயம், மட்/வாழைச்சேனை தமிழ் மகா வித்தியாலயம், நாசிவன்தீவு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, சுங்கான்கேணி தமிழ் கலவன் பாடசாலை, மிறாவோடை தமிழ் கலவன் பாடசாலைகளில் தமது ஆசிரியப் பணியைச் சிறப்பாக மேற்கொண்டு வந்தார்.

அதனைத் தொடர்ந்து தமது ஆசிரியப் பணியிலிருந்து பதவி உயர்வு பெற்று நிறைவேற்று அதிபராகத் தமது கடமைப் பொறுப்பை மட்/பனிச்சங்கேணி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, மட்/கல்மடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலைகளில் மேற்கொண்டார். பின்பு நிரந்தர அதிபராகப் பதவி உயர்வைப் பெற்ற இவர் மட்/பேத்தாழை விபுலானந்த வித்தியாலயத்தில் 1979 தொடக்கம் 1990 வரை தொடர்ச்சியான சேவையை நிறைவேற்றி ஓய்வு பெற்றுக் கொண்டார். ஆசிரியராக, அதிபராகச் சமூகத்திற்குச் சேவை செய்த இவர் ஓய்வு பெற்ற பின்பும் சமூக நலன் கொண்டு செயற்படுகின்றார்.

பேத்தாழை ஸ்ரீமுருகன் ஆலய திருப்பணிச் சபை, பரிபாலனசபை ஆகியவற்றின் தலைவராக இருந்து அக் கோயில் வளர்ச்சிக்குப் பெரும் தொண்டாற்றினார். ஸ்ரீமுருகன் அறநெறிப் பாடசாலை அதிபராக இருந்து மாணவர்களுக்கு அறக் கருத்துக்களையும், சமூக நல்லொழுக்கப் பண்புகளையும் திறம்படப் போதித்து எதிர்காலச் சமூகத்தை நல்வழிப்படுத்தியுள்ளார். அத்தோடு கல்குடா பொலிஸ் உபதேசக் குழுத் தலைவராகவும், பேத்தாழை சனசமூக நிலைய முன்னாள் தலைவராகவும், பேத்தாழை முதியோர் சங்க முன்னாள் தலைவராகவும் சமூகப் பதவி வகித்து தனது சமூகம் தழைத்தோங்க பாடுபடுபவராகக் காணப்படுகின்றார்.

தனது சமூகசேவையில் மேலும் வாழைச்சேனை இந்துக்கல்லூரி, பேத்தாழை விபுலானந்தாக் கல்லூரி என்பவற்றில் உயர்தர வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக நின்று செயற்பட்டவர். அத்தோடு இப் பாடசாலைகளைத் தரம் உயர்த்துவதிலும் முன்னின்று செயற்பட்டவர். கருங்காலிச்சோலை பாடசாலை, சந்திரகாந்தன் வித்தியாலயம், நூல் நிலையம் என்பன நிறுவுதல், இளைஞர்களின் வேலைவாய்ப்பு, கிராமத்தின் அபிவிருத்தி என்பவற்றுக்காகப் பாராளுமன்ற அரசியல் உறுப்பினர்களுடன் சேர்ந்து செயற்பட்டு தனது கிராமத்தை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் சென்றுள்ளார்.

தா.இராசநாயகம் ஐயா அவர்களின் சமூகசேவை காலத்தால் பெரியது, அவரின் சேவை தொடர வேண்டும். அதற்கான அருளைக் கடவுள் வழங்க வேண்டும், இந் நிகழ்வில் இந்த அன்பரைக் கௌரவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றோம்.

## திருமதி.பவானி கனகசிங்கம்
### -கல்வியியலாளரும், சமூகசேவையாளரும்-



வாழைச்சேனையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை நல்லதம்பி (ஆசிரியர்), கனகசபை செல்லத்தங்கம் தம்பதியினருக்கு மகளாகப் பிறந்தார். தனது பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வாழைச்சேனைப் பிரதேசத்திற்கும் அதனை அண்மித்த பிரதேசங்களுக்கும் அவர் தன்னாலான கல்விச் சேவைகளையும், சமூக சேவைகளையும் செய்துள்ளார்.

வாழைச்சேனையைச் சேர்ந்த கனகசிங்கம் என்பவரைத் திருமணம் செய்து கொண்ட இவர் ஏழு பிள்ளைகளின் தாயாவார். இவரது கணவரும் ஓர் சமூக சேவையாளராகவே இருந்தார். பல வழிகளிலும் ஆலயங்களுக்கு உதவியதோடு ஆலய நிர்வாக சபைகளிலும், கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினராகவும் இருந்து கடமையாற்றியுள்ளார். வாழைச்சேனை இளைஞர் கழகம் இவர்களின் பங்களிப்புடன் துரித வளர்ச்சி கண்டதைக் குறிப்பிட்டுக் கூறலாம்.

பவானிதேவி ஆசிரியராக, அதிபராக, பழைய மாணவர் சங்கத் தலைவராக, ஓய்வூதிய சங்க உப தலைவராக, மாதர் சங்க உறுப்பினராகப் பல்வேறு சமூக அமைப்புக்களில் இருந்து இச் சமூகத்திற்கு அயராது பாடுபட்டுள்ளார்.

இவர் பாலர் வகுப்பிலிருந்து ஏழாம் வகுப்பு வரை வாழைச்சேனை கனிஷ்ட பாடசாலையிலும் T.S.C தொடக்கம் S.S.C வரை வாழைச்சேனை சிரேஷ்ட பாடசாலையிலும் கல்வி கற்றுள்ளார். இச் சமூக சேவகிக்கு ஆரம்பக் கல்வியிலிருந்து S.S.C வரை செ.இளையதம்பி (பெரிய ஐயா) என்பவரே கல்வி கற்பித்துள்ளார். இவ்வாசிரியரே இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்கு உரமிட்டு வழிகாட்டியவராவார்.

இச் சமூகசேவகியைப் பற்றிக் கூறும் போது இளையதம்பி அதிபர் அவர்களையும் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லலாம். இவ் அதிபரின் வழிகாட்டலில் இச் சமூகசேவகியின் பங்குபற்றலுடன் "வாழ்மதி" எனும் பத்திரிகை வெளியிடப்பட்டது. வாழைச்சேனைப் பிரதேசத்தில் பத்திரிகை வெளியிடப்பட்ட முதல் சம்பவம் இதுவாகத்தான் இருக்க முடியும். இப்பத்திரிகைக்கூடாகப் பல்வேறு கல்வி விடயங்களும், சமூக ஒழுக்க விழுமியங்களும் சமூகத்தின் மத்தியில் கொண்டுவரப்பட்டன.
இப் பத்திரிகையில் திருமதி.பவானிதேவி "தனயன் கண்ட பாரதி" எனும் தலைப்பில் கட்டுரை எழுதியமையும் குறிப்பிடத்தக்கது.

S.S.C பரீட்சை முடிவுற்றதும் H.S.C படிப்பதற்காக வந்தாறுமூலை மத்திய கல்லூரிக்கு விண்ணப்பித்த போது கறுவாக்கேணி கிராம அபிவிருத்திச் சங்கம் தமது கிராமத்தில் அமைக்கவிருக்கும் பாடசாலையில் கல்வி கற்பிக்கும்படி அழைத்தனர். இதன்படி 1959ஆம் ஆண்டு தொடக்கம் 1961ஆம் ஆண்டு வரை எந்தவிதமான ஊதியமும் பெறாமல் கல்வி கற்பித்தார். அச்சமூகத்திற்கு அயராத கல்விச் சேவையைச் செய்துள்ளார். இவர் அங்கு கல்வி கற்பித்த காலப்பகுதியிலேயே பாடசாலையும் 1961ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது.

1961ஆம் ஆண்டு முதல் நியமனத்தைப் பெற்றுக் கொண்ட இவர் 1962ஆம் ஆண்டு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி தேர்வுப் பரீட்சையை எடுத்தார். அந்தச் சந்தர்ப்பத்தில் அவரின் திருமணம் நடந்ததால் கல்லூரிக்குச் செல்ல முடியாமல் போனது. அதைத் தொடர்ந்து 1963 தொடக்கம் 1965 வரை கறுவாக்கேணி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலும், 1965 தொடக்கம் 1966 வரை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும் 1967 தொடக்கம் 1970 வரை கல்குடா G.C.T.M தற்போதைய நாமகள் வித்தியாலயத்திலும், 1970 தொடக்கம் 1977 வரை வாழைச்சேனை இந்துக் கல்லூரியிலும், 1978 தொடக்கம் 1979 வரை மட்/புதுக்குடியிருப்பு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலும், 1979 தொடக்கம் 1980 வரை கல்குடா C.C.T.M.S தற்போதைய நாமகள் வித்தியாலயத்திலும், 1981 தொடக்கம் ஓய்வு பெறும் வரையான காலப்பகுதி வரை இந்துக் கல்லூரியில் ஆசிரியராகவும், பகுதித் தலைவராகவும், உப அதிபராகவும், அதிபராகவும் கடமையாற்றியுள்ளார்.

இவர் பாடசாலைகளில் கடமையாற்றிய நாட்களில் சிறந்த சேவையைச் செய்ததுடன், சமூக சேவைகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். வாழைச்சேனை இளைஞர் கழகத்தின் மகளிர் பிரிவுக்குப் பொறுப்பாகவும், மாதர் சங்க உறுப்பினராகவும், ஆலயங்களில் தேவார திருவாசகங்களைப் பாடுபவராகவும், பயன் சொல்பவராகவும், வறிய குடும்பங்களுக்குத் தன்னாலான உதவு தொகைகளை வழங்குவதும், தற்போது ஓய்வூதியச் சங்க உப தலைவராகவும் இருந்து தனது சமூக சேவையைச் செய்து கொண்டிருக்கின்றார். இவருக்கு இறையருள் உண்டாவதோடு இவரை இந் நிகழ்வில் கௌரவிப்பதில் பெரு மகிழ்வு அடைகின்றோம்.

## பெருமாள் புண்ணியமூர்த்தி

-சமாதான நீதவான், கல்வியியலாளர், சமூகசேவையாளர்-



காத்தார் பெருமாள் - தங்கம்மா தம்பதியினருக்கு வாழைச்சேனைக் கிராமத்தில் 1936.08.21 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இவர் பிறந்தார். தனது சிறு பராயம் தொடக்கம் திறமையைக் காட்டிய இவர் இன்று வரை பல சாதனைகளுக்கு உரித்துடையவராகக் காணப்படுகின்றார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியைப் பேத்தாழை பரியோவான் சென்ஜோன்ஸ் கல்லூரியில் தரம் மூன்று வரை கற்றவர். பின்பு வாழைச்சேனை கனிஷ்ட வித்தியாலயத்திலும் பின்பு சிரேஷ்ட பாடசாலையிலும் (தற்போதைய இந்துக்கல்லூரி) கற்றார். S.S.C வரை கற்ற இவர் பரீட்சையில் சித்தியடைந்து ஆசிரியர் தொழிலில் தன்னை இணைத்துக் கொண்டார். ஆசிரியத் தொழிலுக்கு வரும் முன்பு 1956ஆம் ஆண்டு கரடியனாறு விவசாயப் பயிற்சி நிலையத்திலும் விவசாயக் கற்கையை மேற்கொண்டிருந்தார். 1958, 1959 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஆசிரியப் பயிற்சியை முடித்துக் கொண்ட இவர் முதல் நியமனமாக நுவரெலியா லிந்துல மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகத் தன் கற்பித்தல் தொழிலை மேற்கொண்டார். 1980 வரை ஆசிரியராக இருந்தவர் 1981ஆம் ஆண்டு அதிபர் பதவிக்கு உயர்வு பெற்றார். பால்சேனை, வட்டவான் கலைமகள் வித்தியாலயம், கல்குடா நாமகள் வித்தியாலயம், புதுக்குடியிருப்பு வாணி வித்தியாலயம் போன்றவற்றில் தனது அதிபர் பதவியை ஓய்வு பெறும் வரை மேற்கொண்டார்.

இதில் வட்டவான் கலைமகள், கல்குடா நாமகள் என்ற இரண்டு பாடசாலைகளினதும் பெயர் மாற்றத்திற்கு முன்னின்று உழைத்தவராக இவர் காணப்படுகின்றார்.

இவ்வாறு பல்வேறு கல்விச் சேவையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட இவர் சமூக சேவைகளிலும் ஈடுபாடு காட்டினார். இவர் ஓர் சிறந்த சோதிடக் கலைஞராவார். ஜாதகம் கணித்தல், பலன் சொல்லுதல் போன்றவை இவருக்கு இறைவன் கொடுத்த வரமாகவே கொள்ளலாம். பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகும் மக்களுக்கு இக் கலையினூடாக உள பலத்தை ஏற்படுத்தி அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் கூறி நல்வாழ்வு வாழ வழிப்படுத்தியவர்.

அத்தோடு இவர் செய்த சமூக சேவைகளையும், அவர் அங்கம்வகித்த பல்வேறு சமூகத் துறைகளையும் நோக்கினால்,

1. கோறளைப்பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் உதவி முகாமையாளராக 1960 தொடக்கம் 1962 ஆம் ஆண்டு வரை சேவை செய்துள்ளார்.
2. வாழைச்சேனை சனசமூக நிலையத்தின் செயலாளர்.
3. வாழைச்சேனை (தமிழ்) கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர்.
4. வாழைச்சேனை இந்துமாமன்றத்தின் தலைவர்,
5. கோறளைப்பற்று இந்து மகா சபையின் தலைவர்,
6. அரசசேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்தின் கோறளைப்பற்று பிரதேசப் பிரிவின் பொருளாளர்,
7. வாழைச்சேனை ஸ்ரீ கைலாயப்பிள்ளையார் ஆலய பரிபாலன சபையின் செயலாளர், தலைவர், ஆலோசகர்,
8. புதுக்குடியிருப்பு ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய பரிபாலன சபையின் செயலாளர், தலைவர், ஆலோசகர்,
9. கொழும்பு விவேகானந்தா சபையின் ஆயுட்கால உறுப்பினர்,
10. மட்டக்களப்பு தமிழ் சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினர்

இவ்வாறு பல்வேறு சமூக நிறுவனங்களில் கடமைப் பொறுப்புக்களைப் பெற்றுக் கொண்டு தனது சமூகத்தை நேசிக்கும் ஓர் பெரிய மனிதராக இவர் காணப்படுகின்றார். இவ்வாறு சமூகப் பணியை மேற்கொள்ளும் இவர் பல்வேறுபட்ட கௌரவங்களையும் பெற்றுக் கொண்டுள்ளார்.

1. 2005.09.09 இல் கொழும்பில் நடைபெற்ற உலக சேக்கிழார் மகாநாட்டில் 'சிவநெறிப் புரவலர்' பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.
2. 2014.10.31 இல் மட்டக்களப்பில் நடைபெற்ற சர்வதேச சிரேஷ்ட பிரஜைகள் வைர விழாவில் பிரதேசத்தின் சிறந்த சிரேஷ்ட பிரஜை எனக் கௌரவிக்கப்பட்டார்.
3. 2015.04.29 இல் பேத்தாழை பொது நூலகத்தால் நடாத்தப்பட்ட உலக புத்தக தினத்தில் 'புத்தகங்களை உருவாக்கிய நல்ல மனிதன்' கௌரவம் வழங்கி நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது.

தற்போதும் துடிப்புள்ள மனிதனாகச் செயற்படும் இவர் தனது சோதிடக் கலையை இன்றும் பின்பற்றி வருகின்றார். பல நல்ல பெரிய மனிதர்களோடு தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு தனது சமூகத்திற்குச் சமய, கலாசார, பண்பாட்டு ரீதியில் பல்வேறு சேவைகளைச் செய்துள்ளார். இவரின் நல்வாழ்வுக்கு இறைவன் துணை புரிய வேண்டும் என வேண்டிக் கொள்கின்றோம். இவ்வாறான சிறந்த சமூக, கல்விச் சேவைகள் செய்த மனிதரைக் கௌரவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றோம்.

## திரு.வேதநாயகம் நவரெட்ணராஜா
### -விளையாட்டுத்துறை-



மட்டக்களப்பைச் சேர்ந்த வேதநாயகம் நல்லம்மா தம்பதிகளின் இரண்டாவது மைந்தனாக 1940.12.30 இல் பிறந்தார். இவர் சிறு வயது முதலே விளையாட்டுத் துறையில் பல சாதனைகளைப் படைத்தவர். இவரை கோச்சர் (விளையாட்டு பயிற்றுவிப்பாளர்) என செல்லப் பெயர் கொண்டும் அழைப்பதைக் காணலாம்.

கற்றலிலும் ஆர்வத்தோடு விளங்கிய இவர் தனது ஆரம்பப் படிப்பு முதல் S.S.C வரை மட்டக்களப்பு R.K.M பாடசாலையில் கல்வி பயின்றார். கல்வி கற்கும் காலத்திலேயே விளையாட்டில் திறமையைக் காட்டி வந்தார். பின்னர் வாழைச்சேனைக் காகித ஆலையில் வேலைவாய்ப்பைப் பெற்று வாழைச்சேனைக் கிராமத்திற்கு வந்தார். வாழைச்சேனையைச் சேர்ந்த சவுந்தரம் என்பவரைத் திருமணம் செய்து மூன்று பிள்ளைகளையும் பெற்றெடுத்தார்.

இன்றும் விளையாட்டுத் துறைக்குப் பங்களிப்புச் செய்யும் இவர் வாழைச்சேனையில் பிரபல்யம் பெற்று விளங்கும் இளைஞர் கழக ஸ்தாபகர்களில் முக்கியமானவராகக் கருதப்படுகின்றார். 1965, 1966 காலப்பகுதியில் இக் கழகத்தை உருவாக்கி இன்று வரை அதனை வழிநடத்திச் செல்லும் ஓர் சிறந்த பயிற்றுவிப்பாளராகக் காணப்படுகின்றார். அவரது அயராத முயற்சியின் காரணமாக இக் கழகம் பல்வேறு சாதனைகளை இக் கிராமத்திற்காக ஈட்டித் தந்ததுடன் பல விளையாட்டு வீரர்களையும் உருவாக்கியுள்ளது.

விளையாட்டில் குறிப்பாக உதை பந்து விளையாட்டில் பாடசாலைக் காலத்திலேயே தலைமைப் பதவியை இவர் வகித்தமை, மட்டக்களப்பு மாவட்ட உதைபந்து சம்மேளனத்தில் உறுப்பினராக இருந்தமை, விளையாட்டுக்காக தேசிய மட்டத்தில் சாதனை நிகழ்த்தியமை, தனது மாணவர்களைத் தேசிய மட்டத்திற்காகப் பயிற்றுவித்தமை போன்ற பல்வேறு சாதனைகளை இவர் நிலை நிறுத்தியுள்ளார்.

இச் சாதனைகளுக்காகப் பல்வேறு கௌரவங்களையும், விருதுகளையும் பெற்றுள்ளார். மட்டக்களப்பு உதைபந்து சம்மேளனம் கழக ரீதியான கௌரவிப்புக்கள், பிரதேச செயலகத்தால் வழங்கப்படும் கௌரவங்களையும் இவர் பெற்றுள்ளார். இவ்வாறான சேவகனுக்கு இறையருள் வேண்டி சமூகசேவையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் கௌரவப்படுத்துவதில் பெருமிதம் கொள்கின்றோம்.

## திரு.மூத்ததம்பி முத்துமாதவன்
### -இலக்கியவாதி, சமூகசேவையாளர்-



இலக்கியப் படைப்பாளியாகத் திகழும் முத்துமாதவன் அவர்கள் சிறந்த கவிஞரும், எழுத்தாளருமாவார். இவர் இப் பிரதேசத்தில் எழுத்துத் துறையில் பேசப்படும் ஓர் மனிதர் மட்டுமன்றி சமூகசேவைகளையும் செய்யும் ஒருவராகவும் காணப்படுகின்றார். பல்வேறு புத்தக வெளியீடுகளையும், பல கௌரவங்களையும் பெற்றவராகவும், பாராட்டுக்குரியவராகவும் காணப்படுகின்றார்.

மாரிமுத்து மூத்ததம்பி (ஆசிரியர்) – நல்லதம்பி சொர்ணம்மா தம்பதியினருக்கு 1953.07.04 ஆம் திகதி ஓட்டமாவடியில் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை 1965 தொடக்கம் 1970 வரை ஓட்டமாவடி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை மட்/கறுவாக்கேணி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலும் (விக்னேஸ்வரா வித்தியாலயம்) கற்ற இவர் இப் பாடசாலையின் முதல் மாணவராகக் காணப்படுவதுடன் க.பொ.சா/தரப் பரீட்சையில் சித்தியடைந்து உள்ளார். வாழைச்சேனை கறுவாக்கேணியை வசிப்பிடமாகக் கொண்ட இவர் தம்பிராசா பத்மாதேவியை மணம் முடித்து ஐந்து பிள்ளைகளுக்குத் தந்தையாகவும் உள்ளார். தனது குடும்பத்தில் அக்கறை செலுத்துவது போன்றே தனது சமூகத்திலும் அக்கறை செலுத்தும் இவர் பல்வேறு சமூகப் பொறுப்புக்களை வகித்து வந்தவராகவும், வருபவராகவும் காணப்படுகின்றார். அவற்றில்,

- கறுவாக்கேணி முத்துமாரியம்மன் செயலாளர்
- கிராம அபிவிருத்திச் சங்கத் குழுத் தலைவர்
- விவேகானந்தா சிறுவர் இல்லத் தலைவர்
- மட்டக்களப்பு சமாதான செயற்பாட்டுக் குழு நீதவான்,
- பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்
- கறுவாக்கேணி அறநெறிப் பாடசாலை ஸ்தாபகர்

என்று பல பொறுப்புக்களில் உள்ளவர். மேலும் இவர் சமூக மேம்பாட்டிற்காக உழைத்த மனிதராகவே இன்றும் செயற்பட்டு வருவது பாராட்டுக்குரியது. அத்துடன் பல்வேறுபட்ட நூல்களையும் தமது எழுத்தாற்றலினால் எழுதி வெளியிட்டமை இன்னும் அவருக்குப் பெருமை சேர்ப்பதாகவுள்ளது.

தமிழ் மொழி மற்றும் தமிழ் இனத்தில் பற்றுக் கொண்ட இவர் தனது தந்தையின் ஊக்கத்தினாலும், ஆக்கத்தினாலும் பயிற்றப்பட்டு பல்வேறு இலக்கியங்களைக் கற்றுப் புலமை பெற்றதனால் எழுத்துத் துறைக்குள் பிரவேசித்தார். இவரின் கவிதையை நாம் உற்று நோக்கினால் சமூகத்தில் சில குடும்பங்களுக்கிடையே நடைபெறும் பிரச்சினைகள், சமூகப் பிரச்சினைகள், சமூக முரண்பாடுகள் என்பவற்றைப் பிரதிபலிப்பதாக அமைந்திருக்கும்.

பல்வேறு எழுத்துலக பிரமுகர்களுடன் தனது தொடர்பை ஏற்படுத்திக் கொண்ட இவர் பேரறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி போன்றோரின் கொள்கையைப் பின்பற்றி நூல்கள் எழுதுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

இவ் எழுத்தாளர் சிறந்த படைப்புக்களை மேற்கொண்டிருந்த காலத்தில் இன வன்முறை காரணமாக வீடு எரிக்கப்பட்டபோது ஏராளமான கவிதைகள் எரியூட்டப்பட்டது. கவிதை மட்டுமன்றி சிறுகதைகள், நாவல்கள், புத்தக வெளியீடுகள், நகைச்சுவைக் கதை போன்றவற்றை வெளியிட்டுள்ளார்.

மூ.முத்துமாதவன் அவர்கள் பல்வேறுபட்ட விருதுகளுக்கும் சொந்தக்காரராகக் காணப்படுகின்றார். கலாபூசண விருதைப் பெற்ற இவர் 2009இல் கவிதைப் போட்டியில் தேசிய விருதையும் பெற்றுள்ளார். அத்தோடு பிரதேச செயலக மட்டத்திலும் பல்வேறு பாராட்டுக்களையும், கௌரவங்களையும் பெற்று சிறந்த எழுத்தாளர் உலகில் தன்னையும் இணைத்துக் கொண்டுள்ளார்.

இவரது படைப்புக்கள் சமூகச் சீர்திருத்தங்களை மையமாக வைத்து எழுதப்பட்டுள்ளமை சமூகம் தன்னிலை பெற வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுகின்றது. இவ்வாறான உயரிய சிந்தனையுடைய இக் கலைஞருக்கு இறையருள் கிடைக்கப் பிரார்த்தித்து இந் நிகழ்வில் கௌரவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றோம்.

## திரு.வயிரமுத்து சின்னத்தம்பி
### -கல்வியியலாளர், சமூகசேவையாளர்-



திரு.வயிரமுத்து சின்னத்தம்பி ஓர் கல்விமானாகவும், சமூகசேவையாளராகவும் தன்னை நிலைப்படுத்திக் கொண்டவர். சிறந்த கல்விச் சிந்தனையாளர். நாட்டின் பல்வேறு பாடசாலைகளில் கடமையாற்றி தன் கல்விச் சிந்தனையால் பல இளைஞர்களின் வாழ்க்கையை மெருகூட்டியவர்.

இச்சேவையாளர் களுதாவளையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1953.08.14ஆம் திகதியன்று களுதாவளையைச் சேர்ந்த வயிரமுத்து என்பவரின் மகனாகப் பிறந்தவர். இள வயதிலேயே பல்வேறு ஆற்றலும், திறனும் பெற்று விளங்கியவர். ஆரம்பக் கல்வியை தரம் ஒன்று தொடக்கம் ஐந்து வரை பதுளை பிபிலை G.T.M.S பாடசாலையில் கற்றார். பின்பு தரம் ஆறு தொடக்கம் உயர்தரம் வரை மட்/களுதாவளை மகா வித்தியாலயத்தில் கற்றார். உயர்தரத்தில் சித்தியடைந்த இவர் தனது பட்டப்படிப்பை களனி பல்கலைக்கழகத்தில் கற்று ஓர் சிறப்புப் பட்டதாரியாக வெளியேறினார். பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறியையும் பெற்றுக் கொண்டார்.

பதுளை அப்புத்தளை தமிழ் மகா வித்தியாலயத்தில் தனது ஆசிரிய சேவையைத் தொடங்கிய இவர் அப்பாடசாலையில் உதவி, பிரதி அதிபராகவும் கடமையாற்றியுள்ளார். அக்காலப் பகுதியில் இப்பாடசாலை துரித வளர்ச்சி கண்டுள்ளது. அதைத் தொடர்ந்து வாழைச்சேனை இந்துக் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றினார். இக் காலப் பகுதியில் கல்லூரி பரீட்சைப் பெறுபேறுகளிலும், புற கிருத்திய செயற்பாடுகளிலும் தன்னிறைவு பெற்றது. ஆசிரிய ஆலோசகராகவும், கோறளைப்பற்று கோட்டக் கல்வி இணைப்பாளராகவும் கல்குடா வலயக் கல்விப் பணிமனையில் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும், சப்ரகமுவ, கிழக்குப் பல்கலைக்கழக வருகைதரு விரிவுரையாளராகவும் கடமையாற்றினார், கடமையாற்றி வருகிறார். இலக்கியத்தில் அதிக நாட்டம் கொண்ட இவர் கவிதை எழுதுவதிலும், வாசிப்பதிலும் தனித்திறமை பெற்றுள்ளதோடு தனது மாணவர்களையும் அதன்பால் ஊக்கப்படுத்துகிறார்.

அறநெறிப் பாடசாலையை நடத்துவதில் ஒத்துழைப்பும் வழங்கி வருகின்றார். எவரிடமும் எந்தக் கொடுப்பனவையும் எதிர்பார்க்காமல் ஆங்கிலம் - தமிழ், சிங்களம் - தமிழ் மொழி பெயர்ப்புக்களைச் செய்து தொடர்பாடல் சேவைகளை வழங்கி வருகின்றார். தமிழ் சமூகம் முன்னேற வேண்டும் என்பதில் இவர் அக்கறை கொண்டவர். சைவ இளைஞர் மன்ற ஆலோசகர் (அப்புத்தளை), வாழைச்சேனை அறநெறிப் பாடசாலை, முன்பள்ளி ஆலோசகராகவும், வாழைச்சேனை தமிழ் இலக்கிய மன்றத்தின் தலைவராகவும் உள்ளார்.

பொருளாதார ரீதியாகவும் வறுமையான நிலையில் உள்ள மாணவர்களுக்கு உதவுகின்ற மனப்பான்மையைக் கொண்ட இவரின் கல்விச் சேவையின் மூலம் எமது சமூகம் முன்னேற்றம் காண வேண்டும் என்ற சிந்தனையுடையவர். இச் சமூகசேவகரின் சேவைக்கு இறையருள் கிடைக்க வேண்டும் என வேண்டி இந்த நிகழ்வில் கௌரவப்படுத்துவதில் பெரு மகிழ்வு அடைகின்றோம்.

## திரு.கந்தையா செல்வநாயகம்
### -எழுத்தாளரும், சமூகசேவையாளர்,கலைஞர்-



மட்டக்களப்பு மாவட்டத்தில் கோறளைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் வாழைச்சேனைக் கிராமத்தில் பிறந்தவரான கந்தையா செல்வநாயகம் என்பவர் தற்போது ஐம்பது வருட காலங்களுக்கு மேலாக 'தாழை செல்வநாயகம்' என்ற புனைபெயரில் கலை இலக்கியத் துறைகளிலும், பொதுச் சேவையிலும் முன்னணியில் நின்று சிறந்த சாதனையாளராகப் புகழ் பெறும் ஒருவராவார்.

இவர் பாடசாலையில் படிக்கும் காலத்திலேயே பேச்சு, விவாதம், விளையாட்டுப் போட்டி ஆகியவற்றிலும், விவேகானந்த சபையினரால் வருடாந்தம் நடாத்தப்படும் அகில இலங்கை இந்து சமயப் பரீட்சையிலும் தோற்றி முதற் பரிசுகளையும், வெற்றிக் கிண்ணங்களையும், சான்றிதழ்களையும், தங்கப் பதக்கத்தினையும் பெற்றவராவார்.

வாழைச்சேனை இந்துக் கல்லூரி, வந்தாறுமூலை மத்திய கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரான இவர் உயர்தரப் பரீட்சை, பல்கலைக்கழக வெளிவாரி கலை முதற்தேர்வு (GAQ) ஆகியவற்றில் சித்தி பெற்றவராவார்.

1967இல் வன அதிகாரியாக நியமனம பெற்று (B.F.O) இலங்கையின் நாலா பாகங்களிலும் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ளார். 1965 இல் படிக்கும் காலத்திலேயே 'கம்பன் கலாமன்றம்' என்ற பெயரில் ஒரு மன்றத்தினை உருவாக்கி அதன் மூலம் பல நாடகங்களை எழுதியும், இயக்கியும் கதாநாயகனாகவும் நடித்துமுள்ளார். கம்பன் கலா மன்றத்தின் தலைவராகவும், இவரால் பெயரிடப்பட்ட 'ஊர்ப்பணி மன்றத்தின்' செயலாளராகவும் (தலைவர்-வி.ஞானமுத்து)), புதுக்குடியிருப்பு கண்ணகியம்மன் ஆலயத்தின் செயலாளராகவும், பேத்தாழை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் (RDS) தலைவராகவும், தற்போது கோறளைப்பற்று அரச ஓய்வூதியச் சங்கத்தின் தலைவராக 17 வருடங்களாகவும், மாவட்ட ஓய்வூதியச் சங்கத்தின் பொருளாளராக எட்டு வருட காலங்களுக்கு மேலாகவும் திறம்பட சேவையாற்றிய ஒருவராவார்.

'நோர்வே மோல்டே தமிழ் கலாசாரப் பேரவை' நடாத்திய உலக நாடக எழுத்தாக்கப் போட்டியில் இவர் எழுதிய **"ஈழம் வருகிறான் பாரதி"** என்ற நாடகம் பரிசு பெற்றுள்ளது. மட்டக்களப்பிலிருந்து வெளியிடப்பட்ட 'தாரகை' மாதச் சஞ்சிகையின் அகில இலங்கை ரீதியிலான சிறுகதைப் போட்டியில் இவரது 'சுயமரியாதை புதைபடுகிறது' எனும் சிறுகதை முதற் பரிசினைப் பெற்றது. கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடாத்தும் வெளிமட்ட கலை இலக்கியப் போட்டிகளான சிறுகதை, கட்டுரை, கவிதை, நாடகம் ஆகியவற்றில் முதற் பரிசுகளைப் பெற்றுள்ளார்.

இவரது நான்கு சிறுதைகள் மாவட்ட ரீதியில் முதற் பரிசுகளையும், 'தோடம்பழக் காசி' எனும் சிறுகதை அகில இலங்கை தேசியமட்டப் போட்டியில் முதற் பரிசான சாஹித்ய விருதினையும் பெற்றுள்ளது.
மேலும் அரசசேவை ஓய்வூதியச் சங்கத்திலும் சிறந்த சேவையாற்றியவர் என்பதற்காக பதக்கம், வெற்றிக் கேடயம், இருபத்தையாயிரம் ரூபாய் பணப் பரிசு ஆகியன பெற்று சங்கத்திற்கு உரிமையாக்கிக் கொடுத்துள்ளார்.

இவர் பெற்ற விருதுகள்:

2002 - பிரதேச செயலக 'கலைஞர் விருது'
2003 - தேசிய இளைஞர் சேவைகள் மன்ற 'கலைஞர் விருது'
2007 - கிழக்கு மாகாண சபை 'ஆளுநர் விருது'
2008 - கலாபூஷண விருது
2014 - தென்றல் சஞ்சிகை 'வீசு தென்றல் விருது'
2015 - மட்டக்களப்பு தமிழ் சங்கத்தின் துணைத் தலைவர் பதவி

**ஏனை ஈடுபாடுள்ள துறைகள்**

சிறுகதை, நாடகம், கட்டுரை, கவிதை, நாடகப் பிரதியாக்கம், நாடக நடிகர், வானொலிப் பேச்சாளர். (இலங்கை வானொலி கல்விச் சேவையில் 10க்கு மேற்பட்ட பேச்சுக்கள் பேசியமை)

குறுந்திரைப்படம் - 'பேயோ நோயோ' (இன்னும் வெளியிடப்படவில்லை)
குறுந்திரைப்பட எழுத்தாக்கப் போட்டி - (கி.மா.ச) 'கடலோரக் காற்று'

வீரகேசரி நிருபராக (1982 - 2007) 25 வருட கால சேவை

**இவர் எழுதியுள்ள நூல்கள்**

1. ஏதிலிகள் (சிறுகதை) – மணிமேகலைப் பிரசுரம் (இந்தியா)
2. ஈழம் வருகிறான் பாரதி (நாடகங்கள்) - இந்தியா வேலூர்
3. வாழைச்சேனை வரலாறு (ஆதவன் அச்சகம்)
4. வள்ளியம்மன் நாடகம் (கூத்து)
5. கண்டிராசன் கதை (கூத்து) – வெளியிடவில்லை
6. நாகமரச்சோலை (நாவல்) - வெளியிடவில்லை
7. பேத்தாழை மாவடி மாரியம்மன் ஆலய வரலாறு

இவரது இரண்டாவது சிறுகதைத் தொகுதி வெளிவரவுள்ளது.

**ஆக்கங்கள் - பத்திரிகைகள், சஞ்சிகைகள்**

வீரகேசரி, தினகரன், மித்திரன், தினக்கதிர், சுடர், தாரகை, இளம்பரிதி, தென்றல், ஞானம் (கொழும்பு), சுதந்திரன்
எழுதிய ஆக்கங்கள் 100க்கு மேல்

2008இல் வாசிப்பு மாதம் மாவட்ட சிறுகதைப் போட்டியில் 1ம் பரிசு
(பல்கலைக்கழக மாணவர்கள், கல்வியல் கல்லூரி மாணவர்கள் பலர் இவரைப் பற்றி ஆய்வு செய்துள்ளனர்). இப்படியான ஒரு சிறந்த நபரைக் கௌரவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

## திரு.ஆறுமுகம் பன்னீர்

-சமூகசேவையாளர்-



வாழைச்சேனையில் வசித்து வரும் ஆறுமுகம் பன்னீர் அவர்கள் சிறந்த சமூகசேவையாளர். கோறளைப்பற்றுப் பிரதேசங்களில் மட்டுமன்றி வெளியிடப் பிரதேசங்களிலும் தனது பொருளாதார வசதியைக் கொண்டு தனது சேவையைச் செய்து கொண்டு வருகின்றார்.

ஆறுமுகம் - சரோஜினி தம்பதியினருக்கு 18.07.1969ஆம் ஆண்டு மகனாக மருதானையில் பிறந்தார். அங்கு கல்வி கற்ற இவர் வாழைச்சேனை இந்துக் கல்லூரியிலும் கல்வி கற்றவர். சிறு வயது முதலே சுயதொழில் துறையில் கடும் முயற்சியுடன் செயற்பட்ட இவர் இன்று தனது பொருளாதாரத் துறையில் முன்னேறியுள்ளார். அப் பொருளாதாரத் துறையில் வரும் வருமானத்தைக் கொண்டு சமூகத்திற்குத் தன்னாலான அனைத்து உதவிகளையும் செய்து கொண்டிருக்கின்றார்.

தற்போது வாழைச்சேனையில் இயங்கும் (A.N.K. Shalimi Sea food center) உரிமையாளரான இவர் வாழைச்சேனை விபுலானந்தர் வீதியில் வசித்து வருகின்றார். மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர் தனது குடும்பத்தைப் போலவே இச் சமூகத்தையும் நேசிக்கும் ஒருவராக உள்ளார்.

சிறுவயதிலேயே சமூகசேவையாளனாகத் தன்னை நிலைப்படுத்திக் கொண்டவர். 1991 ஆம் ஆண்டிலிருந்து (22 வயதில்) சேவை செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

சிறுவர் இல்லங்கள், முதியோர் இல்லங்கள், பாடசாலைகள், ஆலயங்கள், யாத்திரியர்கள், வருமானம் குறைவாக இருக்கும் பல்வேறு பிரிவினருக்கும் தன்னாலான உதவிகளைச் செய்து கொண்டு வருகின்றார். தன்னைப் பெருமிதப்படுத்திக் கொள்ளாத சாதாரண மனிதனாகவே வாழும் இவர் சமூகத்திற்கு ஆற்றிவரும் சேவை அளப்பரியது.

கல்வி முன்னேற்றத்திற்காகவே முன்னின்று உழைக்கும் விருப்புடையவர். பாடசாலைகளுக்கும், கல்வி கற்க விருப்புடைய வசதியற்ற மாணவர்களுக்கும் தானாகவே முன்வந்து உதவிகளைச் செய்கின்றார். வாழைச்சேனை வைத்தியசாலைக்குப் பல்வேறு வகைகளிலும் உதவுகின்ற அவர் வைத்திய சாலையின் அபிவிருத்திக் குழு உறுப்பினராகவும் இருக்கின்றார். ஆரம்ப காலங்களில் ஆலய சபை உறுப்பினராகவும் தொழிற்பட்டிருக்கின்றார். இறை வழிபாட்டில் ஈடுபாடு கொண்ட இவர் ஆலயப் புனரமைப்பு, மீள் உருவாக்கம் போன்ற செயற்பாடுகளுக்கும் பெரும் உதவி செய்து வருகின்றார்.

இச் சமூகசேவையில் ஈடுபட்டு வரும் இள வயது சேவையாளர் பல்வேறு நிறுவனங்களின் கௌரவிப்புக்களையும் தனதாக்கிக் கொண்டுள்ளார். அவர் தனது சேவையை மேற்கொள்வதற்கு திடசங்கற்பம் கொண்டுள்ளார். இப்படியான நல் உள்ளம் கொண்ட சமூகசேவையாளருக்கு இறையருள் வேண்டி இந் நிகழ்வில் கௌரவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

# திரு.கணபதிப்பிள்ளை முருகுப்பிள்ளை
## -சமூகசேவையாளர், சமாதான நீதவான்-



கணபதிப்பிள்ளை முருகுப்பிள்ளை என்பவர் கிண்ணையடிப் பிரதேசத்தில் ஓர் பிரபல்யம்வாய்ந்த பொது மனிதராகக் காணப்படுகின்றார். இவர் ஓர் சமூகசேவையாளராக் தன்னை நிலைநிறுத்தி அப்பிரதேச பொது வேலைகளில் ஈடுபட்டு வருகிறார்.

கணபதிப்பிள்ளை – பத்தினாச்சி தம்பதியினருக்கு மகனாக 1946.04.23ஆம் திகதி கிண்ணையடிப் பிரதேசத்தில் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை கிண்ணையடி சரஸ்வதி வித்தியாலயத்தில் கற்றார். தனது அயராத தொழில் முயற்சியின் காரணமாகப் பொருளாதார வசதியை ஏற்படுத்திக் கொண்டார். தனது பொருளாதாரத்தின் ஒரு பகுதியை சமூகநல சேவைகளுக்குப் பயன்படுத்திக் கொண்டு வருகிறார். தனது சேவையைத் தனது கிராமத்தில் மட்டுமன்றி அயல் கிராமங்களான பிரம்படித்தீவு, முருக்கன்தீவு பிரதேசம், வாகனேரிப் பிரதேசங்களிலும் செய்து வருகிறார்.

இராசையா – புஸ்பவல்லி என்பவருடன் திருமண பந்தத்தில் இணைந்த இவர் ஐந்து பிள்ளைகளின் தந்தையும் ஆவார். இவரின் புதல்வர்கள் தந்தையைப் போல் தாங்களும் சமூகசேவையில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

1. இவர் கிண்ணையடி பிள்ளையார் கோயில் பரிபாலன சபையில் ஆலோசகராக உள்ளதுடன் ஆலயங்களுக்கு மாடுகளைத் தானமாகவும் வழங்கியுள்ளார்.
2. யுத்த காலங்களின் போது பின்தங்கிய பிரதேச மக்களுக்குப் பொருளாதார ரீதியாகப் பல்வேறு உதவிகளைப் புரிந்துள்ளார்.
3. காவத்தமுனை பால் பண்ணைச் சங்கத்தில் 12 வருடங்களாகச் சேவையாற்றி பண்ணையாளர்களின் நலனுக்காகப் பாடுபட்டவர்.
4. 1993 காலப்பகுதியில் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினராக இருந்துள்ளார்.
5. வாழைச்சேனை கமநலசேவை இயக்குனர் சபையில் அங்கத்தவராக இருந்து சேவையாற்றியுள்ளார். தற்போது இவரின் மகன் இச் சபையில் அங்கத்தவராக இருந்து சேவையாற்றுகின்றார்.
6. அரசியல் பிரமுகர்களின் உதவிகளைப் பெற்றும் பல்வேறு உதவிகளைத் தனது சமூகத்திற்காக ஆற்றியுள்ளார்.
7. 1977 தொடக்கம் 1983 காலப் பகுதியில் கிண்ணையடி கிராம அபிவிருத்திச் சங்க அங்கத்தவராகவும் தொழிற்பட்டுள்ளார்.

இவ்வாறு பல்வேறு சமூகசேவையில் ஈடுபட்ட இவர் மேலும் தனது சேவைகளை விரிவுபடுத்தி தனது சமூகத்தை தன்னிலைப்படுத்த எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிய வேண்டும் எனப் பிரார்த்திப்பதோடு இவரை இந் நிகழ்வில் கௌரவிப்பதில் பெருமிதம் அடைகின்றோம்.

## செல்லையா நல்லதம்பி
### -நாட்டுக்கூத்து கலைஞர்-



இவர் பல்வேறு கலைகளைக் கற்று அதனைத் தனது சமூகத்திற்காக ஒப்புவித்து சமூகத்தை கலைக்கூடாக நல்வழிப்படுத்திய ஓர் நபராகக் கருங்காலிச்சோலை பேத்தாழைக் கிராமத்தில் தன்னை நிலை நிறுத்தியுள்ளார்.

இவர் வட்டவான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்றார். பின் வாழைச்சேனை கனிஷ்ட பாடசாலையிலும் கல்வியைப் பெற்றுக் கொண்ட இவர் ஓர் சிறந்த கூத்துக் கலைஞராவார். பாரம்பரியமாகவே தனது தந்தையிடம் இருந்து கூத்துக் கலையைக் கற்றுக் கொண்டவர். ஓர் கலைக் குடும்பத்திலேயே பிறந்துள்ளார். இப்போதும் தனது கலையில் ஈடுபட்டு வருவது வரவேற்கத்தக்கதொன்றாகும். இவர் தொடர்ந்து தனது மாமனாரான திரு.கணபதி தம்பிமுத்து அண்ணாவியாரிடம் இருந்து கூத்துக் கலையில் பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டார்.

இவர் வள்ளி திருமணம், குருசேத்திரப்போர், சுபத்திரை கல்யாணம் போன்ற பல நாட்டுக் கூத்துக்களில் நடித்துள்ளார். இவர் முதன் முதலாக ‘பதின்னான்காம் போர்’ என்ற கூத்தை எழுதி, இயக்கி அண்ணாவியாராக வளர்ச்சி கண்டுள்ளார். பவளக் கொடி, பாசுபதம், அல்லி நாடகம், விப்பிரவாகன், நாரதர் கலகம் போன்ற பல கூத்துக்களை பாடசாலை மாணவர்களுக்கும், இக் கலையில் ஈடுபாடு கொண்ட மாணவர்களுக்கும் பயிற்சியளித்து அரங்கேற்றியுள்ளார்.

இவர் கலைத் துறைக்கு மட்டுமன்றி பல்வேறு சமூக அமைப்புக்களிலும் தன்னை ஈடுபடுத்தி ஓர் சமூகசேவையாளராகவும் இருக்கின்றார்.

1. சிவில் பாதுகாப்புக் குழுவில் உறுப்பினர்
2. மாவடி மாரியம்மன் கோயில் உப செயலாளர்
3. கருங்காலிச்சோலை, பேத்தாழை மரண சங்கச் செயலாளர்,
4. சிறுவர் கண்காணிப்புக் குழு உறுப்பினர்

என பல்வேறு சமூக அமைப்புக்களிலும் தன்னை ஈடுபடுத்தி தனது சமூகத்திற்கு வலு சேர்த்து வருகின்றார். இன்றும் அவரின் சேவை தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இவரின் சேவையைப் பாராட்டி பல்வேறு நிறுவனங்களும் பாராட்டுக்களையும், கௌரவிப்புக்களையும் செய்துள்ளது. இந்த வகையில் இவர் கலாபூஷண விருதையும் பெற்றுக் கொண்டுள்ளார்.

மேலும் இவர் தோல் கருவியினாலும், கூத்து இசைக் கருவியான மத்தளம் வாசிப்பதிலும் திறமையானவர். இவரின் கலைப்பணியும், சமூகப் பணியும் எதிர்காலச் சமூகத்திற்கு முன்னுதாரணமாகத் திகழ்கின்றதோடு இவரின் சமூகசேவை தொடர இறைவன் அருள்புரிய வேண்டும் என்பதோடு இவரை இந் நிகழ்வில் கௌரவிப்பதில் பெருமிதம் கொள்கின்றோம்.

## திரு.கந்தையா நடேசன்
### - சமூகசேவையாளர்-



பேத்தாழையில் ஓர் சமூகசேவையாளரும் கோறளைப்பற்று பிரதேச சபை உறுப்பினருமாகிய அழகரெட்ணம் கந்தையா மற்றும் கந்தப்பு வாத்தியாரின் இளையமகள் அன்னமணிக்கும் பேத்தாழை கிராமத்தில் 09.01.1950ஆம் ஆண்டு பிறந்த மகன் கந்தையா நடேசன்.

ஆரம்பக் கல்வியை பேத்தாழை விபுலானந்தா கல்லூரியிலும் பிற்பாடு வாழைச்சேனை இந்துக் கல்லூரியிலும் கற்றார். கல்விப் பொதுத் தராதர பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்து பிரதேச கல்வியில் சிறந்து விளங்கிய இவர் 1971ஆம் ஆண்டு தொடக்கம் 1983ஆம் ஆண்டு காலப்பகுதி வரை காகித ஆலையில் மின்சாரப் பகுதியில் வேலை செய்தார். இக் காலப் பகுதியில் திரேசா என்பவரை மணந்து இல்லறத்தில் இணைந்து கொண்ட இவர் இரு பெண் பிள்ளைகளுக்குத் தந்தையாவார். தனது மனைவியை பாலர் பாடசாலை ஆசிரியையாகப் பணிபுரிய அனுமதித்தார். இதன் பிரகாரம் வாழைச்சேனை திரேசாம்மாள் தேவாலயத்தின் பாலர் பாடசாலையில் 25 ஆண்டுகள் நீண்ட காலமாகக் கடமை புரிந்த அவரின் அர்ப்பணிப்பின் காரணமாக பல ஆயிரம் மாணவர்கள் அடிப்படைக் கல்வியைச் சிறப்புறக் கற்றனர்.

வாழைச்சேனை காதித ஆலையில் கடமையாற்றிய பின் இவர் 1984ஆம் ஆண்டு காலப் பகுதியில் வெளிநாட்டிற்கு வேலை வாய்ப்பின் நிமிர்த்தம் சென்று அங்கு பதினேழு வருடங்களாக வேலை புரிந்தார். நாட்டிற்குத் திரும்பிய அவர் விவசாயத்தில் அதிக நாட்டம் காட்டினார். அதன் மூலம் பெற்ற வருமானத்தில் தனது சமூகத்திற்குச் பல சேவைகளைச் செய்தார்.

இவர் பாடசாலை நாட்களிலேயே தலைமைத்துவப் பொறுப்பை ஏற்கும் திறன் பெற்றிருந்தார். பாடசாலையில் படிக்கும் காலங்களில் இந்துமாமன்றத் தலைவர், மாணவர் மன்றத் தலைவர், மாணவர் தலைவர் போன்ற தலைமைப் பொறுப்பை வகித்தவர். சமூகத்திற்காகப் பல்வேறு சமூகத் தொண்டுகளையும் நிறைவேற்றுபவராக இருக்கின்றார். அந்த வகையில்,

1. கல்குடாத் தொகுதி கயரோகத் தடுப்புச் சங்கச் செயலாளராக இரு வருடம் சேவை செய்தார்.
2. பேத்தாழை கிராம அபிவிருத்திச் சங்கப் பொருளாளராக சில ஆண்டுகள் இருந்தார். இக் காலப் பகுதியில் பேத்தாழையில் சில வீதிகள் அவரின் முயற்சியின் பயனாக நிர்மாணிக்கப்பட்டது.
3. புதுக்குடியிருப்பு கண்ணகியம்மன் கோயில் உபதலைவராக இருந்துள்ளார்.

4. வீரையடி பிள்ளையார் ஆலயத்தில் நிருவாக ஆலோசகராகவும், பேத்தாழை வடக்கு கிராம அபிவிருத்திச் சங்க உப தலைவராகவும் இருந்துள்ளார்.

இவ்வாறு பல்வேறு சமூகப்பணியாற்றிய சமூகசேவையாளரான க.நடேசன் என்பவர் தற்போது பேத்தாழை முதியோர் சங்கத் தலைவராகவும், மட்டக்களப்பு மாவட்ட முதியோர் சம்மேளன உபதலைவராகவும், கிழக்கு மாகாண முதியோர் சம்மேளனத் தலைவராகவும், அகில இலங்கை முதியோர் சங்க மட்டக்களப்பு மாவட்டத் தலைவராகவும் இருந்து வருகின்றார். அத்தோடு மரண சங்கத்தினை உருவாக்கி அதன் தலைவராகவும் இருந்து முதியோர்களின் நலன்களிலும் அக்கறை செலுத்தி வருகின்றார். முதியோர்களுக்கான கோயில் தரிசிப்புக்கான சுற்றுலா, உதவித் தொகை பெற்றுக் கொடுத்தல் போன்ற சமூக நல செயற்பாடுகளில் இன்று வரை செயற்பட்டுக் கொண்டு இருக்கின்றார்.

சமூக நலனைக் கருத்திற் கொண்டு செயற்படும் இவர் மதுரங்கேணி, வாகனேரி, சாப்பமடு போன்ற இடங்களில் விவசாய அமைப்புத் தலைவராகவும், வாழைச்சேனை கமநல விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் சபை உப தலைவராகவும், வாழைச்சேனை ஆதார வைத்தியசாலை அபிவிருத்திக்குழு அங்கத்தவராகவும் பல சேவைகள் செய்து வருகின்றார். அத்தோடு சமாதான நீதவானாகவும், மட்டக்களப்பு மத்திய சபைக் குழு உறுப்பினராகவும், வாழைச்சேனை இந்துமாமன்ற கணக்காய்வாளராகவும், சிறுவர் பாதுகாப்புச் சபை உறுப்பினராகவும், கலாசாரப் பேரவை அங்கத்தவராகவும், கல்குடாப் பொலிஸ் உபதேச குழு உறுப்பினராகவும் இவர் சமூகப் பதவிகள் வகிக்கின்றார். சமாதான செயற்பாட்டு அமைப்புத் தலைவராகவும், கல்குடாத் தொகுதியில் 22 அமைப்புக்களைக் கொண்டு நிறுவிய சமாதானத்திற்கும், அமைதிக்குமான அமைப்புகளின் பேரவைத் தலைவராகவும் இருந்தவர். இப் பதவிகள் மூலம் தன்னாலான சமூக சேவைகளைச் செய்து வருகின்ற இவரின் சேவையைப் பாராட்டி பல விருதுகளும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கௌரவ விருதுகள், சிரேஸ்ட பிரஜைக்கான விருது, சிறந்த சமூக சேவையாளருக்கான விருது, மட்டக்களப்பு மாவட்ட சமூகசேவைத் திணைக்களத்தால் சிறந்த தலைவர் விருது, கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்ட சமூகசேவை விருது, கிழக்கு மாகாண சமூகசேவைத் திணைக்களத்தினால் சிரேஸ்ட பிரஜைகள் விருது, இந்து கலாசார அமைச்சினால் இலங்கையின் உயர் விருதான கலாபூசணம் போன்ற அரச விருதுகளையும் பெற்றுக் கொண்டுள்ளார். க.நடேசன் அவர்கள் தற்போதும் பல சமூக சேவையில் ஈடுபட்டு வருவதைக் கவனிக்கக் கூடியதாகவுள்ளது. இவர் சமூகத்திற்கான தனது சேவையைத் தொடர்ந்தும் முன்னெடுக்க எல்லாம் வல்ல இறைவன் துணையிருக்க வேண்டும் என பிரார்த்தித்து இந்நிகழ்வில் பாராட்டி கௌரவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

## திரு.சாமித்தம்பி பஞ்சலிங்கம்
### -சமூகசேவையாளர்-



சாமித்தம்பி பஞ்சலிங்கம் என்பவர் 1951.10.07 இல் சாமித்தம்பி – சிதப்பிள்ளை என்பவர்களுக்கு மகனாக வாழைச்சேனை, பேத்தாழைக் கிராமத்தில் பிறந்தார்.

தனது தந்தையினதும், தாயினதும் பாதுகாப்பில் நற்பண்புகளுடன் வளர்க்கப்பட்ட இவர் இன்று அக்கிராமத்தில் தலைசிறந்த பெரு சமூக சேவையாளராகவும், கொடைவள்ளலாகவும் காணப்படுகின்றார்.

இவர் சிறு பராயத்தில் கல்வியில் சிறந்து விளங்கியவர். குடும்பம் கஷ்டங்களை அனுபவித்த போதும் தனது கல்வியைத் திறனுடன் கற்று பேத்தாழைக் கிராமத்தில் ஓர் கல்வியாளனாகத் தன்னை நிலை நிறுத்திக் கொண்டவர்.

தனது படிப்பை மட்/பேத்தாழை கலவன் பாடசாலையில் ஆரம்பித்தார். ஆரம்பக் கல்வியினை தரம் ஒன்று தொடக்கம் மூன்று வரை அப்பாடசாலையில் கற்றவர் தரம் நான்கு, ஐந்து வகுப்புக்களை வாழைச்சேனை தமிழ் மகா வித்தியாலயத்தில் (தற்போது மட்/வாழைச்சேனை இந்துக் கல்லூரியில்) பயின்றார். இப் பாடசாலையில் அக்காலத்திலேயே புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த நபராகவும், அக்காலப் பகுதியில் கல்வியில் சிறந்து விளங்கியவராகவும் இவர் காணப்படுகின்றார்.

அதைத் தொடர்ந்து தரம் ஆறு தொடக்கம் பதினொன்று வரை இன்று கிழக்குப் பல்கலைக் கழகமாகத் திகழும் மட்/வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்று கல்விப் பொது சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்தார். வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயம் பல்வேறு சாதனைகளையும், அதி உத்தம கல்வியியலாளர்களையும், திறமைசாலிகளையும் உருவாக்கிய ஓர் நிறுவனம் இப் பாடசாலையில் இவர் கல்வி கற்றது ஓர் வரப்பிரசாதமாகவே கருத வேண்டியுள்ளது.

பாடசாலைப் படிப்பை முடித்துக் கொண்ட அவர் தனது குடும்பச் சூழ்நிலை காரணமாக தொழில் வாய்ப்பைப் பெறும் நோக்கோடு வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலையில் 1969 தொடக்கம் 1981 காலப் பகுதி வரை பயிலுனராகவும் பின்பு இயந்திர ஆள் (Mechinery boy) ஆகவும் தனது தொழிலைச் சிறப்பாகச் செய்து வந்தார். அக்காலப் பகுதியில் திருமண பந்தத்தில் இணைந்த இவர் நான்கு பிள்ளைகளுக்குத் தகப்பனானார்.

இன்று இவரின் பிள்ளைகள் சிறந்த தொழில் துறையில் பிரகாசிப்பதோடு அவரின் சமூக சேவைப் பணியினை அவர்களும் தொடர்ந்து செய்து வருவது வரவேற்க, பாராட்டத்தக்கதொன்றாகும்.

அதன் பின்பு தனது தொழில் நிமிர்த்தம் காரணமாக 1982இல் கட்டார் நாட்டிற்குச் சென்றார். அங்கு மின்னியலாளராகத் தொழில் புரிந்த அவர் அதிகளவான வருமானத்தையும் சேர்த்து தனது குடும்பத்தை சிறப்புறச் செய்ததோடு தன்னை சமூக சேவையிலும் இணைத்துக் கொண்டார்.

தனது சேவையை மேலும் விருத்தி செய்யும் நோக்கோடும் தனது தொழில் முயற்சியை விருத்தி செய்யும் நோக்கோடும் 1991ஆம் ஆண்டு நாட்டிற்கு வந்த அவர் தனது சொந்தக் கிராமமான பேத்தாழையில் தனது வதிவிடத்தில் சுய தொழில் முயற்சியில் ஈடுபட்டார். அந்த வகையில் 'ரமணா ஐஸ் பழத் தொழிற்சாலை', 'Ramana Fancy House' போன்றவற்றையும் ஆரம்பித்தார்.

தொடர்ந்து 2004 தொடக்கம் இன்று வரை Ramya Distributors and Contract Companyயை நிறுவி அதனை வழிநடத்தி வருகின்றார். இதன் மூலம் வரும் வருமானத்தில் ஒரு பகுதியை சமூக நலனுக்காக இவர் செலவு செய்வது பாராட்டுக்குரிய விடயமாகும். அத்தோடு பல நபர்களுக்கான தொழில் வாய்ப்புக்களையும் இதன் மூலம் ஏற்படுத்திக் கொடுத்து பல குடும்பங்களை வாழ வைக்கின்ற ஒரு நபராகவும் விளங்குகின்றார்.

சமூகத்தில் பல்வேறு பதவிகளை சமூக நலனில் அக்கறை கொண்ட இவர் வகித்தமை குறிப்பிடத்தக்கதாகும். இந்த வகையில்,

1. 1968-1974 வரையான காலப்பகுதியில் பேத்தாழை கிராம அபிவிருத்திச் சங்கத்தில் செயலாளராகக் கடமையாற்றி அக்கிராம வளர்ச்சிக்கு வித்திட்டுள்ளார். இவர் காலத்தில் பேத்தாழையில் பல்வேறு அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொண்டு பாடசாலை வளர்ச்சியிலும் முன்னின்று உழைத்துள்ளார்.

2. 1968-1978 வரையான காலப்பகுதியில் பேத்தாழை மாவடி மாரியம்மன் கோயில் அபிவிருத்திச் சங்க செயலாளராகக் கடமையாற்றியுள்ளார்.

3. 1978-1982 வரையான காலப்பகுதியில் பேத்தாழை மாவடி மாரியம்மன் கோயில் அபிவிருத்திச் சங்கத் தலைவராகக் கடமையாற்றி அன்று அக் கோயில் சிறப்புற்று விளங்குவதற்கு வழிசமைத்துக் கொடுத்துள்ளார்.

4. 1999 தொடக்கம் இன்று வரை பேத்தாழை மாவடி மாரியம்மன் கோயில் அபிவிருத்திச் சங்கத்தின் போசகராகக் கடமையாற்றுகின்றார்.

5. 2004 தொடக்கம் இன்று வரை வாழைச்சேனை கோறளைப்பற்று கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகக் கடமையாற்றுகின்றார்.

6. 2014 தொடக்கம் 2016 வரை ஸ்ரீ வீரையடி விநாயகர் கோயிலின் அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராகக் கடமையாற்றினார்.

சமூகத்தில் மேற்கூறப்பட்ட பதவிகளை வகித்ததோடு பேத்தாழை ஸ்ரீ வீரையடி விநாயகர் ஆலயத்திற்கு மணிக்கூட்டு கோபுரம், பேத்தாழை மாவடி மாரியம்மன் ஆலயத்திற்கான மண்டபம், பேத்தாழை பாலீஸ்வரர் ஆலயத்தில் பிள்ளையார் கோயில், வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கான பல தேவைகள் என்பவற்றையும் தனது சமூகத் தொண்டாகச் செய்துள்ளார். அத்தோடு இவரின் புதல்வர்கள் சமூகத்திற்குத் தேவையான உதவிகளை இன்றும் தனது தந்தையூடாக நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றனர்.

இவரது சமூக சேவைகள் பாராட்டுக்குரியது, கௌரவத்திற்குரியது, மதிப்புக்குரியது, இவரின் சேவைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும் என சமூகம் சார்ந்தவர்கள் வேண்டிக் கொள்வதுடன் இவரின் இச் சமூக சேவையைத் தொடர எல்லாம் வல்ல இறைவன் இவருக்கும், இவரின் குடும்பத்தினருக்கும் என்றும் அருள் புரியட்டும்.

இந்நிகழ்வில் இவரை கௌரவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

## திரு.காத்தமுத்து கிருஸ்ணப்பிள்ளை
## -சமூகசேவையாளர்-



கிண்ணையடியைப் பிறப்பிடமாகக் கொண்ட காத்தமுத்து கிருஷ்ணப்பிள்ளை ஓர் சிறந்த சமூகசேவையாளராவார். கல்வி, சமூக அபிவிருத்தி, ஆலய அபிவிருத்திகளில் தன்னை ஈடுபடுத்தி ஓர் சமூக ஆர்வலராக, சமூகப் பற்றுடையவராகத் திகழ்கின்றார்.

கிண்ணையடியில் காத்தமுத்து - பத்தினாச்சி தம்பதியினருக்கு மகனாக 22.10.1940ஆம் ஆண்டு பிறந்த இவர் தனது ஆரம்பக் கல்வியை மட்/கிண்ணையடி சரஸ்வதி வித்தியாலயத்திலும், இரண்டாம் நிலைக் கல்வியை ஓட்டமாவடி மத்திய கல்லூரியிலும், கல்விப் பொது தராதர சாதாரணம் வரை கற்று சித்தியடைந்தார். கல்வியில் சிறந்து விளங்கிய இவர் தமது சமூகத்தவர்களையும் அதன்பால் ஈர்ந்து ஒரு கல்விச் சமூகத்தை உருவாக்குவதற்குப் பாடுபட்டார்.

இக்காலப் பகுதியில் பொன்னுச்சாமி குணநாயகி என்பவரைத் திருமணம் செய்து கொண்டு ஐந்து பிள்ளைகளின் தந்தையாகவும் விளங்கும் இவர் தனது குடும்பத்தைக் கண்ணும் கருத்துமாகப் பேணி தனது மக்களையும் நன்னிலைப்படுத்தி அம்மக்களையும் சமூகசேவையில் ஈடுபடுத்தியுள்ளமை வரவேற்கத்தக்கதொன்றாகும்.

இவர் தன்னுடைய இளமைப் பருவத்திலேயே சமூகச் சிந்தனையுடைய நபராக விளங்கியிருக்கின்றார். அத்துடன் சமூகத்தில் பல்வேறு பொறுப்புக்களையும் வகித்திருக்கின்றார். எடுத்துக்காட்டாக,

1. 1999இல் கிண்ணையடி கிராம அபிவிருத்திச் சங்கத் துணைத் தலைவராகச் செயற்பட்டு கிராம அபிவிருத்திக்குப் பல்வேறு வகையிலும் உதவி புரிந்துள்ளார்.
2. யுத்த அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டிருந்த மக்களுக்கு மின்சார வசதியை ஏற்படுத்துவதிலும், மின் கம்பங்களைப் புதிதாக நாட்டுவதற்கும் இலங்கை மின்சார சபையின் உதவியைச் சமூகத்திற்குப் பெற்றுக் கொடுத்தார்.
3. கிண்ணையடி இறங்குதுறை படகுச் சேவையை ஆரம்பித்து வைத்தார்.
4. வம்மியடி (கிண்ணையடி) வீதியை நிர்மானித்தார்.
5. கிண்ணையடி மயானத்தைப் பதிவு செய்து ஐந்து ஏக்கர் காணியைப் பெற்று சமூகத்திற்குக் கொடுத்தார்.
6. 1997ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை கோறளைப்பற்று மத்தியஸ்தர் சபையின் உறுப்பினராகச் சேவையாற்றுகின்றார்.

7. 1998 தொடக்கம் 2000 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கிண்ணையடி மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் செயலாளராகக் கடமையாற்றியுள்ளார்.
8. கிண்ணையடி விஷ்ணு ஆலயத்தில் 2009ஆம் ஆண்டு தொடக்கம் 2014ஆம் ஆண்டு வரை ஆலோசகராகக் கடமையாற்றினார்.
9. 1990 தொடக்கம் 1996 வரை சேம்பையடி ஆதவன் விவசாய அமைப்பில் தலைவராகச் சேவையாற்றினார்.
10. யுத்த அனர்த்தங்களின் போது மரண விசாரணைகளை முன்னின்று வழி நடத்தி உரிய நேரத்திற்குச் சடலங்களை உரியவர்களுக்கு ஒப்படைக்கும் முயற்சியில் முன்னின்று உழைத்தார்.
11. 1998ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை சமாதான நீதவானாகக் கடமையாற்றுகின்றார்.
12. கோறளைப்பற்று பிரதேச செயலகத்தின் கமநெகும இணைப்பாளராக நியமிக்கப்பட்டு அப்பதவியை வகித்தார்.
13. 1965ஆம் ஆண்டு கிண்ணையடி விளையாட்டு மைதானத்தை உருவாக்குவதற்கு முன்னின்று உழைத்தார்.

இவ்வாறான சமூக சேவையை மேற்கொண்டமைக்காக பல விருதுகளையும் தன்னகத்தே கொண்டவராக விளங்குகின்றார். அத்துடன்,

1. சிறந்த மத்தியஸ்தராகக் கடமையாற்றியமைக்கான ஜனாதிபதி விருதை 2014ஆம் ஆண்டு பெற்றுக் கொண்டார்.
2. சிறந்த விவசாயியாக மட்டக்களப்பு விவசாயத் திணைக்களத்தினால் கௌரவிக்கப்பட்டார்.
3. 2004.11.24 இல் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தினால் 'சிறந்த எடுத்துக்காட்டானவர்' என கௌரவிக்கப்பட்டார்.

இவ்வாறான சமூகசேவையாளரைக் கிண்ணையடிக் கிராமம் பெற்றுள்ளது ஓர் வரப்பிரசாதமே. இச் சமூகசேவையாளரின் தேக ஆரோக்கியத்திற்கும், சமூக சேவையை மென்மேலும் விருத்தி செய்யவும் எல்லாம் வல்ல இறைவன் துணை நிற்க வேண்டும் என்பதோடு இச் சமூகசேவையாளரைக் கௌரவிப்பதில் நாமும் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

## இராமசாமிப்பிள்ளை மணி
### -சமூகசேவையாளர்-



இன்று எமது பிரதேசத்தில் சிறந்து விளங்கும் சமூகசேவையாளராக இவரைக் குறிப்பிடலாம். யாரும் அறியாவண்ணம் பிறருக்குக் கொடுத்து உதவும் அடக்கமான பண்பைக் கொண்டவர். கல்வி, சமய, கலாசார ரீதியாக தான் வாழும் சமூகம் தலைநிமிர்ந்து நிற்க வேண்டும் எனும் பேரார்வம் கொண்டவர்.

இந்தியாவிலே சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த திருக்கோஷ்டியூர் எனும் இடத்தில் இராமசாமிப்பிள்ளை – ராஜம்மாள் தம்பதியினருக்கு 22.08.1939ஆம் ஆண்டு பிறந்தவர். தனது தொழில் நிமிர்த்தம் காரணமாக 1949ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்து எமது மாவட்டமான மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதேசத்தில் 1963ம் ஆண்டிலிருந்து வசித்து வந்தார். மூன்று பிள்ளைகளின் தந்தையானவர். தனது குடுமபத்தைப் போலவே தான் வாழும் சமூகமும் தன் இனமும் சிறப்புற்று இருக்க வேண்டும் என விரும்பும் சிறந்த மனிதர்.

சமய வழிபாடுகளில் ஈடுபாடு கொண்ட இவர் ஆலயங்களில் பூசைகளை ஏற்பாடு செய்து நிகழ்த்தித் தருபவர். நமது சமயக் கலாசாரங்களை நேர்த்தியாகக் கடைப்பிடிப்பவர். அமைதியான சுபாவம் கொண்ட இவர் தன்னை நாடி உதவி கேட்பவர்களுக்கு இல்லை என்று சொல்லாது கொடுக்கும் தன்மையுடையவர். தமிழ் கலாசாரத்தில் மூழ்கிய இவர் பிறரும் அவ்வாறு கடைப்பிடிக்க வேண்டும் எனும் அவா கொண்டவர். ஆலயங்களுக்கூடாக சமூக மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும் என நினைப்பவர்.

தன்னை வெளிப்படுத்திக் கொள்ள விரும்பாதவர். 'வலது கை கொடுப்பது இடது கைக்குத் தெரியக் கூடாது' எனும் மரபுக்கேற்ப வாழ்ந்தும், உதவி செய்தும் வருபவர்.

வாழைச்சேனைக் கிராமம் மட்டுமன்றி அயல் கிராமங்கள், நாட்டில் சில பகுதிகளில் உள்ள ஆலயங்களுக்குப் பல்வேறு சேவைகளைச் செய்துள்ளமை பாராட்ட வேண்டிய விடயம்.

வாழைச்சேனைச் சந்தையில் தமிழ் வர்த்தகர் சங்கம் ஒன்றை உருவாக்குவதில் முன்னின்று செயற்பட்டவர்.

இவரைப் போலவே இவரின் புத்திரர்களும் சமூகத்திற்கு அளப்பெரிய சேவையாற்றியுள்ளனர். யுத்த காலத்தில் கணனிக் கல்வியை வாழைச்சேனைப் பிரதேச மாணவர்களுக்கு வழங்குவதில் முன்னின்று உழைத்தார்கள். பாடசாலையில் பாட ரீதியான கருத்தரங்குகளையும், போட்டி நிகழ்வுகளையும் மேற்கொண்டு வாழைச்சேனைச் சமூகத்திற்குப் பங்களிப்புச் செய்தனர்.

அன்று தொட்டு இன்று வரை வாழைச்சேனைப் பொது அமைப்புகளுக்கும், வறுமையுற்ற மாணவர்களுக்கும் பொருளாதார ரீதியாக அளப்பரிய சேவை செய்து வருகின்றார்கள்.

இறை வழிபாட்டில் அதிக ஆர்வம் கொண்டவர். 'அகவணக்கம்' எனும் நூலை தனது 75 ஆவது வயதில் 2013.08.22 அன்று ஸ்ரீ கைலாயப்பிள்ளையார் ஆலயத்தில் வைத்து வெளியிட்டிருந்தார். மனிதர்கள் (இந்துக்கள்) அதிகாலையில் எழும்பி இறைவனை வழிபடுவதன் மூலமும், கூட்டு வழிபாடு செய்வதன் மூலமும் இறையருளைப் பெறலாம் எனக் கூறும் இவர் தனது வழிபாட்டைத் திறம்பட மேற்கொள்கின்றார்.

தனது 79வது வயதிலும் ஓர் சிறந்த உழைப்பாளியாகவுள்ளார். தமிழ் இளைஞர்கள் அரசாங்கப் பதவியையே எதிர்பார்க்கின்றார்கள். சுய தொழில் செய்து முன்னேற முயற்சிக்கின்றார்கள் இல்லை என ஆதங்கப்படும் இவர் தனது சுய தொழில் முயற்சியால் வரும் பொருளாதாரத்தில் ஒரு பகுதியைக் கொண்டு வாழைச்சேனைப் பிரதேசத்தில் சமூகத்திற்குப் பொருளாதார ரீதியாக சேவை செய்து வருகின்றார்.

சமூகத்திற்குப் பொருளாதார ரீதியாகவும், சமய ரீதியாகவும் சேவை செய்யும் இத் தனிப் பெரும் மனிதரை பிரதேச செயலக ரீதியாகக் கௌரவம் வழங்கி கௌரவித்துள்ளனர்.

இவ் நல் உள்ளம் கொண்ட மனிதருக்கு இறைவன் அருள் புரிவதோடு இந் நிகழ்வில் நாமும் கௌரவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றோம்.

## திரு.நல்லையா தருமலிங்கம்
## - சமூகசேவையாளர் -



கிண்ணையடியைப் பிறப்பிடமாகக் கொண்ட நல்லான் நல்லையா – சின்னத்தம்பி அன்னம்மா தம்பதியினருக்கு மகனாக 17.04.1946ஆம் ஆண்டு கிண்ணையடியில் ந.தருமலிங்கம் அவர்கள் பிறந்தார். இவர் தனது கிராமத்தில் பற்று மிக்கவர். தனது இளமைக் காலம் தொட்டு கிராம முன்னேற்றத்திற்காகத் தன்னை அர்ப்பணித்து சேவையாற்றி வந்துள்ளதை அக்கிராம மக்கள் நினைவு கூர்ந்தார்கள்.

மட்/கிண்ணையடி சரஸ்வதி வித்தியாலயத்தில் தரம் ஒன்று தொடக்கம் எட்டு வரை கல்வி கற்ற இவர் கல்வியை இடைநடுவில் விட்டு விலகினாலும் சிறந்த எண், எழுத்து அறிவுள்ளவராகவும் மொழித் தேர்ச்சியுடையவராகவும் காணப்படுவது சிறப்பானதாகும். 1968 இல் இராமக்குட்டி நீலாவதி என்பவரைத் திருமணம் செய்து கொண்ட இவர் ஆறு பிள்ளைகளின் தந்தையாவார். அவரைப் போலவே அவரின் பிள்ளைகளையும் சமூக சேவையில் ஈடுபடுத்தி வருவதைக் காணக்கூடியதாய் உள்ளது.

இவர் சமூகப் பிரதிநிதியாக இருந்து பல்வேறு சேவைகளைச் செய்துள்ளமையை அவர் வகித்த பதவிகளை வைத்து உணர்ந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. எடுத்துக்காட்டாக,

1. 1975 தொடக்கம் 1980 காலப் பகுதி வரை கோராவெளி கண்ணகியம்மன் ஆலயத்தின் தலைவராகச் செயற்பட்டு கோயில் திறம்பட இயங்குவதற்குத் தன்னாலான உதவிகளைச் செய்துள்ளார்.
2. 1978 தொடக்கம் 1946 வரை வாழைச்சேனை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குனர் சபை உறுப்பினராக இருந்துள்ளார்.
3. 1980 தொடக்கம் 1985 காலப்பகுதியில் கிண்ணையடி சனசமூக நிலையத்தில் தலைவராகச் சேவையாற்றியுள்ளார்.
4. 1985 தொடக்கம் 1990 காலப் பகுதி வரை வாழைச்சேனை கமநல சேவை நிலைய இயக்குனர் சபை உறுப்பினராகச் சேவையாற்றியுள்ளார்.
5. 1988 தொடக்கம் 1995 காலப்பகுதியில் கிண்ணையடி மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தின் தலைவராகக் கடமையாற்றியுள்ளார்.
6. 2007 தொடக்கம் இன்று வரை கிண்ணையடி ஆதவன் முதியோர் சங்கப் பொருளாளராக் கடமையாற்றுகின்றார்.
7. 1982 தொடக்கம் 1986 வரை கிண்ணையடி அபிவிருத்திச் சங்க உப தலைவராக இருந்துள்ளார்.

8. சிவில் பாதுகாப்பு உறுப்பினராகவும் 1980 தொடக்கம் 1990 வரை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவராகவும் கடமையாற்றினார்.
9. கிண்ணையடி நாகதம்பிரான் ஆலயத்தில் 1975 தொடக்கம் 1980 காலப் பகுதியில் தலைவராகவும் செயற்பட்டார்.

இவ்வாறு சமூகத்தில் பல்வேறுபட்ட பொறுப்புக்களை வகித்த இவர் சமூக சேவையைச் சிறப்பாகவும் செய்துள்ளார். இவரின் பணியினை தற்போது இவருடைய புத்திரர்கள் முன்னெடுத்துச் செல்வதைக் கண்டு நாம் பெருமிதம் அடைகின்றோம். இவ்வாறான சேவைகளைத் தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டும் அதற்கு எல்லாம் வல்ல இறைவன் துணை நிற்க வேண்டும் என பிரார்த்தித்து இச் சமூக சேவையாளரைக் கௌரவப்படுத்துவதில் பெருமிதம் கொள்கின்றோம்.

## கணபதிப்பிள்ளை நடராசா
### -சமூகசேவையாளர்-



வாழைச்சேனை கிண்ணையடியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை, செல்லத்தங்கம் தம்பதியினருக்கு மகனாக 1946.04.15ஆம் திகதி கிண்ணையடியில் பிறந்தார். அச் சமூகத்திற்குச் சிறந்த சேவை செய்யும் சமூக சேவையாளராகத் தன்னை நிலை நிறுத்தியுள்ளார்.

ஆரம்பக் கல்வியைக் கிண்ணையடி சரஸ்வதி மகா வித்தியாலயத்திலும், தரம் ஏழு, எட்டு வகுப்புக்களை ஓட்டமாவடிப் பாடசாலையிலும் கற்றார். அதன் பின் கமச் செய்கையில் ஈடுபட்டு வந்த இவர் வாழைச்சேனை காகித ஆலையில் 1965ஆம் ஆண்டு சேர்ந்து கடமை புரிந்து வந்தார். 2006ஆம் ஆண்டு வரை தொழில் புரிந்துள்ளார். ஓய்வு பெற்ற இவர் வீட்டுத் தோட்டச் செய்கையில் தன்னை ஈடுபடுத்தி தனது பொருளாதாரத் தேவையை நிறைவேற்றும் சிறந்த மனிதராகக் காணப்படுகின்றார்.

1971ஆம் ஆண்டு திருமண பந்தத்தில் இணைந்த இவருக்கு ஐந்து பிள்ளைகள் உள்ளனர். தற்போதும் பொது வேலைகளில் ஈடுபட்டு வருபவராக உள்ளார். எடுத்துக்காட்டாக,

- தென்னைப் பயிர்ச்செய்கை அமைப்பின் தலைவராகவும்,
- முதியோர் அமைப்பின் பொருளாளராகவும்,
- மத்தியஸ்த சபையின் ஓர் உறுப்பினராகவும்,
- கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினராகவும்,
- ஆலய வேலைகளிலும் தன்னை ஈடுபடுத்தி சமூகத்திற்குச் சிறந்த பங்களிப்பைச் செய்து வருகின்றார்.

இவரைத் தொடர்ந்து அவரின் மருமகனான திரு.ஞானேஸ்வரன் அவர்களும் சமூகசேவைகள் செய்வதிலும், பொருளாதார ரீதியாகச் சிறப்பான சேவையைச் செய்து கொண்டிருக்கின்றார். இவரின் சேவையை சுங்காங்கேணி, கிண்ணையடி மக்கள் நன்கு அறிவார்கள். இள வயதுடைய இவரை நாமும் மதிக்கின்றோம். இன்னும் பல சேவைகளைச் செய்ய, எந்த வேளையிலும் செய்யத் தயாராக இருக்கும் இவருக்கு இறைவன் அருள்புரிய வேண்டிக் கொள்கின்றோம்.

திரு.க.நடராசா என்பவர் தனது சமூகத்திற்காக ஆற்றும் பணியினை முன்னெடுத்துச் செல்ல இறைவன் அருள் புரிவதோடு இக் கௌரவிப்பு விழாவில் கௌரவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றோம்.

## திருமதி.சறோஜா இராசையா

### - கல்வி, சமூகசேவையாளர்-



1942.07.22 இல் வாழைச்சேனையைச் சேர்ந்த பொ.தம்பிராஜா அவர்கட்கும், நாவற்குடாவைச் சேர்ந்த தம்பிமுத்து அன்னபாக்கியத்திற்கும் மகளாகப் பிறந்தவர். ஆரம்பக் கல்வியை துவரம்பிட்டி தோட்டப் பாடசாலையில் தமது தந்தையாரிடமும், பின் நாவற்குடா தர்மரட்ணம் வித்தியாலயத்திலும், வாழைச்சேனை அ.த.க.பாடசாலையிலும் கற்று 1952ஆம் ஆண்டு 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து வந்தாறுமூலை மத்திய கல்லூரி விடுதியில் சேர்ந்து H.S.C வரையும் கல்வி கற்றார். வலைப் பந்தாட்டம், எறிபந்து போன்ற விளையாட்டுக்களில் பங்கு பற்றியதோடு பாடசாலையில் இல்லத் தலைவியாகவும், மாணவ தலைவியாகவும் இருந்தார்.

வந்தாறுமூலை மத்திய கல்லூரியில் கல்வி கற்ற வேளையில் அங்கு கற்பித்த திருமதி.N.இராஜேஸ்பரசிங்கம், J.இராமலிங்கம், திரு.S.சுந்தரலிங்கம், திரு.சு.தங்கராஜா, திரு.யோகம் வேலுப்பிள்ளை, திரு.லாம்ப் போன்ற ஆசிரியர்களையும், திரு.ஜோசப், திரு.K.சோமசுந்தரம், திரு.P.சவரிமுத்து போன்ற அதிபர்களையும், அவர்களின் வழிநடத்துதல்களிலும் செயற்பட்டார். H.S.C கல்வியை முடித்தபின் 1964ஆம் ஆண்டுவரை தந்தைக்கு உதவியாக கிரிப்போருவா பாடசாலையில் வேதனமின்ற ஆங்கிலம் கற்பித்தார். 1964ஆம் ஆண்டு மாணவ ஆசிரியருக்கான போட்டிப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டு KG/சென் மேரிஸ் தமிழ் வித்தியாலயத்தில் ஆங்கில மாணவ ஆசிரியராகக் கடமையாற்றி 1966-1967 வரை மட்/அரசினர் ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி பெற்றார். பயிற்சியின் பின் மட்/மீராவோடை அ.த.க.பாடசாலையில் உதவி ஆசிரியராக 1968.01.01 இல் நியமனம் கிடைத்தது. பின் 1974 இல் அதிபர் தரம் V போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து 15.02.1975 இல் வாழைச்சேனை மகா வித்தியாலயத்தில் சிரேஸ்ட உதவி ஆசிரிய நியமனம் பெற்று அங்கு இரு வாரங்கள் கடமையாற்றிய பின் மீண்டும் மட்/மிராவோடை அ.த.க.பாடசாலைக்கு அதிபராகக் கடமையேற்று 1980.05.30 வரை சேவை செய்தார். இக்கால கட்டத்தில் பல வருடங்களாக அதிபரே ஆசிரியராகவும் தனி ஆசிரியராக 1-5 வரை வகுப்புக்களுக்குக் கற்பித்தார்.

மிராவோடை போக்குவரத்து வசதியற்ற கஷ்டப் பாடசாலையாக இருந்தது. இதனால் மாணவர்களுக்குப் மாலைநேர வகுப்புக்கள் சனி, ஞாயிறு மேலதிக வகுப்புக்கள் நடாத்தி அவர்களின் கல்வித் தரத்தை உயர்த்த வேண்டியிருந்தது. 1969ஆம் ஆண்டு திருமண பந்தத்தில் திரு.பா.இராசையா ஆசிரியருடன் இணைந்த போது அவரும் மாணவர் நலனில் அக்கறையுள்ளவராக இருந்தார். மாணவர்களும் வட்டார விளையாட்டுப் போட்டி, கலை விழா, சைவ சமயப் பரீட்சை, தமிழ் ஆசிரிய சங்கம் நடாத்திய பரீட்சைகளில் பங்குபற்றி பல சான்றிதழ்களையும் பெற்றனர். 1978இல் ஏற்பட்ட சூறாவளியினால் பாடசாலைக் கட்டடம் அதிபர் விடுதி அனைத்தும் முற்றாகச் சேதமடைந்து விட்டது.

1980.05.30 இல் மட்/வேம்பு அ.த.க.பாடசாலைக்கு மாற்றம் பெற்று வந்த போது அதுவும் ஒரு கஷ்டப் பிரதேசப் பாடசாலையாகவும், ஆசிரியர் வளம், தளபாட வசதி, கட்டட வசதி எதுவுமே இல்லாத பாடசாலையாக இருந்தது. மரங்களின் கீழ் வகுப்புக்கள் நடாத்தப்பட்டன. இங்கும் சிறிது காலம் தனி ஆசிரியராகவே கடமையாற்ற வேண்டியிருந்தது. பாடசாலை வளவு பனை வடலிகளால் நிரம்பியிருந்தது. பெற்றோருடைய ஒத்துழைப்புடன் அவைகள் அகற்றப்பட்டு ஒரு சிறிய கொட்டிலும் அமைக்கப்பட்டது. மாணவர் வரவு மிகக் குறைவு, கரைவலை இழுக்கச் சென்றுவிடுவார்கள். வீடுகளுக்குச் சென்று அவர்களைத் தேடிப் பிடித்து பாடசாலைக்கு அழைத்து வரவேண்டிய நிலை காணப்பட்டது. இங்கும் பின்னேரம், சனி, ஞாயிறுகளில் மேலதிக வகுப்புகளும் நடாத்தப்பட்டது. மாணவர்களின் கல்விக்காக ஆசிரியரும் அவரின் கணவரும் நேரம் காலம் பாராது செயற்பட்டார்கள். மாணவர்களும் கல்வியில் படிப்படியாக முன்னேறினர்.

1990இல் தரம் 2 அதிபர் நியமனம் கிடைத்தது. ஆசிரியராக 8 வருடங்களும், அதிபராக 27 வருடங்கள் சேவை செய்து 2002.07.21 இல் ஓய்வு நிலை அதிபரானார். மிராவோடை, மட்/வேம்பு அ.த.க பாடசாலையில் கடமையாற்றிய போது மிகுந்த மன மகிழ்ச்சியும், மன நிறைவையும் பெற்றுக் கொண்டார். ஓய்வு பெற்ற பின்னரும் மாணவர்களுக்கு இலவச ஆங்கில வகுப்புக்களை நடாத்தினார்.

இவர் கும்புறுமூலை சிரேஷ்ட பிரஜைகள் சங்கம், கோறளைப்பற்று பிரதேச சம்மேளனத்திலும், மட்டக்களப்பு மாவட்ட சம்மேளனத்திலும் நிருவாக உறுப்பினராகவும், கோறளைப்பற்று மத்தியஸ்த சபை உறுப்பினராகவும், சமாதான நீதவானாகவும் சேவையாற்றுகின்றார்.

இவ்வாறான கல்வி, சமூகச் சேவைகளை மேற்கொண்ட இவருக்கு இறையருள் கிடைப்பதோடு இவரைக் கௌரவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றோம்.

## திரு.ஆறுமுகம் சுதாகரன்
### -சமூகசேவையாளர்-



கோறளைப்பற்று வாழைச்சேனை, கல்குடா வீதியில் வசிக்கும் சுதாகரன் அவர்கள் ஆறுமுகம் - மீனாட்சி அவர்களுக்கு மகனாய் 1947.12.29ஆம் திகதியன்று பிறந்தார்.

இவர் ஆரம்பத்தில் வாழைச்சேனை இந்துக் கல்லூரியில் கல்வி பயின்று பின் வந்தாறுமூலை மத்திய கல்லூரியில் க.பொ.த.வகுப்பு வரை கற்று சித்தியடைந்துள்ள இவர் 1975ஆம் ஆண்டில் அரசாங்க அதிபர் நிர்வாகத்தில் மட்டக்களப்பு கச்சேரியில் இயங்கும் சிறுகைத்தொழில் திணைக்களத்தினால் புதுக்குடியிருப்பு தும்புத் தொழில் நிலையத்தில் ஆசிரியராகவும், பொறுப்பதிகாரியாகவும் கடமையாற்றியுள்ளார். இவரது காலத்தில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் மாகாண சபையின் கீழ் இயங்கும் தும்புத் தொழில் நிலையங்களில் மிகவும் கூடிய உற்பத்தியில் முதல் தரம் வகித்ததுடன் பின் இவர் மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கும் தும்பு நிலையங்களின் மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டு நான்கு ஆண்டுகள் கடமையாற்றி 29.12.2007இல் ஓய்வு பெற்றார்.

அத்துடன் வாழைச்சேனை தெங்கு உற்பத்தி கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகப் பதவி வகித்ததுடன் கோறளைப்பற்று பிரதேச செயலகம், சமுர்த்தி அலுவலகம் அமைப்பதற்கும் இவர் முன்னின்றதால் அரசாங்க அதிபரின் வேண்டுதலுடன் கட்டிடம் அமைக்க காணி அன்பளிப்புச் செய்யப்பட்டது.

அத்துடன் வாழைச்சேனை தமிழ் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் 20 வருடங்களாக தலைவர் பதவியிலும், பொருளாதாரப் பதவியிலுமிருந்து அக்காலத்திலேயே சங்கத்திற்கு காணியில்லாத குறையை இவர் பெற்றுக் கொடுத்ததோடு அரச நிதியில் கட்டிடமும் அமைக்கப்பட்டது.

வாழைச்சேனை ஸ்ரீ கைலாயப்பிள்ளையார் ஆலயத்தின் இணைத் தலைவராகவும் பதவி வகித்ததோடு கோயிலில் நவக்கிரகம் இல்லாத குறையை நீக்கியவர். அத்துடன் வாழைச்சேனை கோறளைப்பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாசத்தில் தலைவராக இரு தடவைகளில் மூன்று ஆண்டுகள் கடமையாற்றி இக்கட்டான காலத்தில் பல சேவைகளைப் புரிந்தார்.

இவர் சுசிலாதேவி அவர்களை மனைவியாக்கி மூன்று பிள்ளைகளுக்குத் தந்தையாகவுள்ளார். இவரது காலத்தில் இன்னும் பல சேவைகளை கிராமத்திற்காகச் செய்ய இறைவன் அருள் புரிவதோடு இந் நிகழ்வில் இவரைக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றோம்.

## திரு. ஹெ.மெத்தியேஸ்
## -எழுத்தாளர், சமூகசேவகர்-



ஹெட்டியாராச்சி – அன்னநேசம் தம்பதியினருக்கு இரண்டாவது மகனாக கிரானில் 1946.08.10 இல் பிறந்தார். இவர் எழுத்தாளராகவும், கவிதைப் படைப்பாளியாகவும், சமூகசேவையாளராகவும் தன்னை வளப்படுத்திக் கொண்டார்.

தனது ஆரம்பக் கல்வி முதல் 1951ஆம் ஆண்டு தொடக்கம் 1958 வரை கிரான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலும், இரண்டு ஆண்டுகள் வாழைச்சேனை மகா வித்தியாலயத்திலும் (இந்துக் கல்லூரி) கற்றார். இவர் SSC பரீட்சையை மட்/கிரான் மகா வித்தியாலயத்தில் எழுதினார்.

1973ஆம் ஆண்டு பேரானந்தவல்லியைத் திருமணம் செய்து இல்லறத்தில் இணைந்து கொண்ட இவருக்கு நான்கு பெண் பிள்ளைகள் உள்ளனர். தனது குடும்பத்தைப் போலவே இலக்கியத்தையும், தனது சமூகத்தையும் நேசித்தவராவார்.

1973 தொடக்கம் 1983 வரை காகித ஆலையில் வர்ணம் தீட்டுபவராக வேலை செய்தார். 1983 தொடக்கம் 1990ஆம் ஆண்டு வரை வாழைச்சேனை வெலிங்டன் தியேட்டரில் அறிவிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

இவர் சிறந்த இலக்கியப் படைப்பாளியாவார். இவர் சிறு வயது முதலே இலக்கியம் படைப்பதில் ஈடுபாடு கொண்டவராகக் காணப்பட்டார். ஓவியக் கலையினூடாக எழுத்தாளராகப் பிரவேசித்தார். இவர் தரம் 8இல் கற்கும் போது அவரின் ஆசிரியரான சிவலிங்கம் அவர்களிடமிருந்து சித்திரக் கலைக்கான நுணுக்கங்களைக் கற்றுக் கொண்டார். இவரின் ஓவியக் கலைக்கு சௌந்தரராஜன் என்பவரும் ஊக்கமளித்துள்ளார். அதனைத் தொடர்ந்து வில்லுப் பாட்டுக் கலைஞர் மாஸ்டர் சிவலிங்கம் அவர்களின் சகோதரர் துரைசிங்கம் அவர்கள் இவரின் சித்திரக் கலையை மேலும் வளர்த்துக் கொள்ள ஊக்கமளித்தார்.

திரு.மெத்தியேஸ் "மருதம்" எனும் கையெழுத்துப் பத்திரிகை ஒன்றை ஆரம்பித்து சிறுகதைகள், கவிதைகள் எழுதி வெளியிட்டார். இப்பத்திரிகையில் இவரின் ஓவியங்களும் இடம்பெற்றிருந்தன. எழுத்துத் துறையில் மட்டுமன்றி நாடகத் துறையிலும் சிறந்து விளங்கினார். "மார்பிலா வெடி" என்ற நாடகம் இவருக்கு சிறப்பையும், கௌரவத்தையும் பெற்றுக் கொடுத்தது.

பதினெட்டு வயதில் எம்.ஏ.ரகுமான் அவர்களின் மாதாந்த சஞ்சிகையில் "நிலவே" என்ற கவிதையை வெளியிட்டார். இக்கவிதை இவரின் கன்னிக் கவிதையாகும். இக் கவிதைக்குக் கிடைத்த நன்மதிப்பின் காரணமாக மேலும் அவரை கவிதை எழுத தூண்டுகோலாய் அமைந்தது.

தினபதி, சிந்தாமணி போன்ற பத்திரிகையில் அவருடைய ஆக்கங்கள் வெளிவந்தன. 'வண்ணம்' எனும் ஓவியம் வரையப்பட்ட கையெழுத்துப் பிரதியையும் இவர் வெளியிட்டிருந்தார். இப்பிரதி பலரின் துணையுடன் வெளிவந்தது.

மெத்தியேஸ் அவர்கள் 1980களில் வாழைச்சேனை புதுக்குடியிருப்பு கலைவாணி கலா மன்றத்தின் தலைவர், செயலாளர் என பல தடவை செயற்பட்டுள்ளார். கலைவாணி கலாமன்றத்தில் தனது தயாரிப்பிலான நாடகங்களையும் மேடையேற்றியுள்ளார். இவரது "அளவான குடும்பம் சுகமான குடும்பம்" என்ற நாடகத்திற்காக அப்போதைய அரசாங்க அதிபராக இருந்த திரு.எஸ்.அந்தோனிமுத்து என்பவரால் பாராட்டுக் கௌரவத்தைப் பெற்றுக் கொண்டவர். இவர் சமூகச் செயற்பாடுகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவராவார்.

இக் கலைஞருக்கு தன் கலைகளை மேலும் மேலும் வளர்த்துக் கொள்வதற்கு இறையருள் கிடைப்பதோடு இக் கலைஞரை, சமூகசேவகரைக் கௌரவிப்பதில் பெரு மகிழ்வு அடைகின்றோம்.

# திருமதி.காத்தமுத்து பூரணம்
-சமூகசேவகி -



இவர் காத்தமுத்து - சின்னப்பிள்ளை என்பவர்களுக்கு ஐயர் குடும்பத்தில் 1950.11.21ஆம் திகதி பிறந்தர். இவர் தனது ஆரம்பக் கல்வியை தரம் ஐந்துவரை சுங்காங்கேணி அ.த.க.பாடசாலையில் கற்றார். தொடர்ந்து வேறு பல பாடசாலைகளிலும் கற்று தனது 13ஆவது வயதில் 1964ஆம் ஆண்டு திருமணம் செய்தார். இதில் இவருக்கு ஐந்து பிள்ளைகள் உள்ளனர். தனது 27ஆவது வயதில் அவரது கணவர் காலமானதைத் தொடர்ந்து பெட்டி, பாய்கள் இளைத்துத்தான் தன் பிள்ளைகளை வளர்த்தார்.

இவ்வாறான நிலையிலும் சமூக நலனில் அக்கறை கொண்ட இவர் 'சர்வோதயம்' எனும் அமைப்பில் தலைவராகவும், மாதர் சங்கத்தில் செயலாளராகவும், 'தடாகம்' நிறுவனத்தில் பெற்றார் சங்கத்தில் செயலாளராகவும் பணியாற்றினார். சமூகசேவையைப் போலவே கலையாற்றலும் மிக்க இவர் கும்மி, கோலாட்டம், கூத்து போன்றவற்றை மாணவர்களுக்குப் பழக்கி அதனைப் பல நிகழ்வுகளில் அரங்கேற்றியும் வந்தார். அத்தோடு ஆலயத் தொண்டுகளிலும் ஈடுபட்டு வந்ததுடன் தனது 60வது வயது பூர்த்தியானதைத் தொடர்ந்து தனது கிராமத்திலுள்ள முதியோர் சங்கத்தில் சேர்ந்து செயலாளராக இருந்தார்.

தனக்கு வயதானாலும் கூட முதியோர்களுக்கும் நாடகம், கும்மி போன்றவற்றைப் பழக்கி பல மேடைகளுக்கும் கொண்டு அரங்கேற்றியுள்ளார். இப்படியான ஓர் சமூகசேவகியை, கலைஞரைக் கௌரவிப்பதில் பெருமகிழ்வடைகின்றோம்.

## திரு.கணேசநாதன் சோமஸ்கந்தன்
## (பொருளாதார சமூகசேவையாளர்)



வாழைச்சேனையில் வசித்தவரான கணேசநாதன் என்பவருக்கு மகனாக 1976.08.12ஆம் திகதி பிறந்த இவர் சிறந்த சமூக சேவகர். பொருளாதார ரீதியாகச் சேவை செய்யும் இவர் பல இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்களையும் வழங்கியுள்ளார்.

வாகனேரிப் பிரதேசத்திற்கு இவரின் சேவை சிறப்பானதோர் எடுத்துக்காட்டாகவுள்ளது. வாகனேரிக் கோயில் இவரின் பங்களிப்புடன் தலைநிமிர்ந்து நிற்கின்றது. அது போல் அப்பிரதேசத்தில் கஷ்டப்படும் மக்களுக்கும் பொருளாதார ரீதியாக உதவிக்கரம் நீட்டி வருகின்றார்.

இதைத்தவிர பல்வேறு கோயில்களுக்கு கட்டிட வேலைப் பாடுகளுக்கும், வணக்க வழிபாடுகளுக்கும் உதவி வருகின்றார். கல்குடா முருகன் கோயில், சிவன் கோயில், கறுவாக்கேணி ஆஞ்சநேயர், பிள்ளையார் கோயில் என பல கோயில்களுக்கு உதவிகள் செய்து வருவதோடு பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள குடும்பங்களுக்கும் உதவிகளை வழங்கி வருகின்றார்.

சமூகத்திற்குச் சிறந்த சேவையாற்றி வரும் சமூகசேவகனுக்கு இறையருள் கிடைக்க வேண்டும். தொடர்ந்தும் அவருடைய சமூகசேவை இடம்பெற வேண்டும் என்பதோடு இந் நிகழ்வில் இவரைக் கௌரவிப்பதில் பெரு மகிழ்வடைகின்றோம்.

## திரு.சீனித்தம்பி பஞ்சாட்சரம்



சீனித்தம்பி பஞ்சாட்சரம் என்பவர் மட்டக்களப்பு கல்லடியில் 1939.05.08ஆம் திகதி பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை அரசடி மகா வித்தியாலயத்தில் கற்றார். தொடர்ந்து மேற்படிப்பை உயர்தரம் வரை அப்பாடசாலையிலேயே கற்றார். சிறந்த சமூகசேவையாளர்.

திருமணத்தின் பின் தற்போது வாழைச்சேனை சுங்காங்கேணியில் வசித்துவரும் இவர் ஒரு ஆசிரியராகத் தனது தொழிலை மேற்கொண்டார். ஆசிரிய கலாசாலையில் ஆசிரிய பயிற்சியைப் பெற்றுக் கொண்ட இவர் வாகரை, நிலாவெளி, குச்சவெளி, ஆலங்கேணி என பல பாடசாலைகளில் ஆசிரியராகக் கடமையாற்றினார். பாடசாலையில் ஆசிரியராகத் தொழில் புரியும் காலத்திலேயே சிறந்த மாணவர்களை உருவாக்கி சமூகத்திற்கும் தனது சேவையை வழங்கினார்.

அதன் பின் அதிபராகத் தரம் உயர்த்தப்பட்ட இவர் முதலாம் தர அதிபராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்றார். இவர் பல்வேறு சமூகசேவைகளை மேற்கொண்டு வருகின்றார். அத்தோடு பல்வேறுபட்ட சமூக நிறுவனங்களிலும் பொறுப்புக்களை வகித்து வருகின்றார். அவற்றில்

1. கோறளைப்பற்று வாழைச்சேனை மத்தியஸ்தர் சபை உறுப்பினர்.
2. ஆலய பரிபாலன சபை உறுப்பினர், தலைவர்.
3. முதியோர் சங்க உறுப்பினர்.
4. கமநல அமைப்பில் அங்கம் வகித்தல்.
5. பிரதேச அபிவிருத்திச் சபை செயலாளர்

ஆகிய பதவிகள் மூலம் சிறந்த சமூகசேவை செய்து வருகின்றார்.

தனது பிறந்த இடத்திலும் பல்வேறு சேவைகளைச் செய்து வரும் இவர் தனது வசிப்பிடத்தில் நீண்ட காலமாக வாழ்வதோடு அச் சமூகத்திற்கு அளப்பெரிய சேவை செய்து வருகின்றார். இச்சேவையாளனுக்கு இறையருள் கிடைப்பதோடு இந்நிகழ்வில் கௌரவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றோம்.

## திருமதி.தம்பிராசா பிள்ளையம்மா (அமிர்தம்)

## (பொருளாதார சமூகசேவையாளர்)



இவர் கிரானில் கன்னமுத்து – பெரியபிள்ளை என்பவர்களுக்கு மகளாக 1944.10.10ஆம் திகதி பிறந்தார். இவர் தனது சமூகத்திற்குப் பொருளாதார ரீதியாகப் பல்வேறு சேவைகளைச் செய்து வருகின்றார்.

தனது ஆரம்பப் படிப்பு தொடக்கம் கல்வி பொது தராதர சாதாரண தரம் வரை கிரான் மகா வித்தியாலயத்தில் கற்றார். பின் காகித ஆலையில் தொழில் புரிந்து வந்தார். தம்பிராசா என்பவரைத் திருமணம் முடித்த இவர் ஏழு பிள்ளைகளின் தாயுமாவார். தனது கணவனின் வேண்டுகோளிற்கிணங்க தொழில் புரிவதை இடை நிறுத்திவிட்டு குடும்பத்தைக் கவனித்துக் கொண்டார்.

ஆரம்ப காலங்களிலிருந்தே தனது சமூகத்திற்குத் தன்னால் ஏதும் செய்ய வேண்டும் என்ற எண்ணப்பாங்குடையவராகத் திகழ்ந்தார். இன்று இவருடைய புத்திரர்களின் உதவியோடு பொருளாதார ரீதியாகப் பிறருக்கும், ஆலயங்களுக்கும் உதவிகள் செய்து வருகின்றார்.

இவரைப் போலவே இவரது கணவரும் சமூக நலன் கொண்டவராக உள்ளார். அத்துடன் இந்து மாமன்றத்தின் உறுப்பினராகவும், தொண்டராகவும் இருந்து சேவையாற்றியுள்ளார்.

கிரானில் மட்டுமன்றி பல்வேறு கிராமங்களிலும் தனது சேவையைச் செய்து வருகின்றார். இவரின் சேவைக்கு இவரின் மகனான தம்பிராசா சதானந்தன் உதவி செய்து வருகின்றார். வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்குதல், திருமணம் செய்யவிருக்கும் பெண்களுக்குப் பொருளாதார ரீதியாக உதவுதல், சிறுவர் இல்லங்களுக்கு உதவுதல், ஆலய கட்டிட நிர்மாணங்களுக்கு நிதி உதவி வழங்குதல், முதியோர் சங்க உறுப்பினர்களுக்கு பொருளாதார ரீதியாக உதவுதல் போன்ற பல்வேறு உதவிகளைச் செய்து வருகின்றார்.

தன் இனத்தின் மீது பற்றுக் கொண்ட இவர் தனது சமூகம் கல்வியில் தன்னிறைவு காண தன்னாலான உதவிகளைச் செய்ய முடியும் எனக் கூறுவதோடு ஓர் சமூகப் பற்றாளராகவும் இனப் பற்றாளராகவும் உள்ளார்.

எனவே இச்சேவையாளராலும், அவரது புத்திரர்களாலும் மேலும் பல சேவைகள் தொடர இறைவன் அருள் புரிவதோடு இவ் விழாவில் இவரைக் கௌரவிப்பதில் நாம் பெரு மகிழ்வடைகின்றோம்.

## முருகன் வேலாத்தை
### -சமூகசேவையாளர்-



முருகன் வேலாத்தை 1946.10.10 அன்று வாழைச்சேனையில் பிறந்தார். தனது பூர்வீக வாழ்விடம் நாசிவன்தீவாகும். ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த இவர் தனது செயற்பாடுகளாலும், சமூக சேவையாலும் அக்கிராம மக்களின் விருப்பத்திற்குரிய தலைவியாக தலை நிமிர்ந்து நிற்கின்றார்.

ஆரம்பக் கல்வியை மட்டும் சிவன்தீவு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கற்றார். கல்வி கற்றது ஆரம்ப நெறியாக இருந்தாலும் சிறந்த மொழியறிவும், எண்ணாற்றலும், ஒழுக்கமும், பிறரை மதிக்கும் பண்பும், சமூகச் சிந்தனையாளராகவும் காணப்படுவது சிறப்பான அம்சமாகக் கருதலாம். தனது அனுபவத்தின் மூலம் பிரபல அரசியல்வாதிகளின் (W.W.தேவநாயகம்) தொடர்புடன் தனது கிராமத்திற்குப் பல்வேறு சமூக சேவைகளைச் செய்துள்ளார். அக்கிராம மக்கள் இவரின் சமூக சேவையை இன்றும் நினைவு கூறுபவர்களாகக் காணப்படுகின்றனர்.

சின்னையா காத்தமுத்து என்பவரைத் தனது பதினெட்டாவது வயதில் கரம் பிடித்த இவர் ஐந்து பிள்ளைகளின் தாயாவார். இதில் ஓர் மகனை யுத்த காலப் பகுதியில் பறிகொடுத்தவராகவும், இன்னும் ஓர் மகனை பாம்பு தீண்டியதனால் பறிகொடுத்தவராகவும் உள்ளார். W.W.தேவநாயகம் ஐயா அவர்களின் காலத்தில் சிவன்தீவுக்குப் பல்வேறு சேவைகளைத் தன்னால் ஆற்ற முடிந்தது எனச் சொல்லும் இவர் ஓர் சிறந்த சமூகசேவையாளராகவும் மிளிர்கின்றார். இதைத் தொடர்ந்து பின்வந்த அரசியல் பிரமுகர்களின் உதவியுடனும் தனது சமூகத்திற்கு உதவியுள்ளார்.

நாசிவன்தீவுக் கிராமத்தில் 1982இல் மாதர் சங்கத்தில் பொறுப்பு வாய்ந்த தலைமைப் பதவியை வகித்துள்ளார். 1983இல் செயலாளராகவும், 1984இல் மீண்டும் தலைவராகவும், அதன் பின் தொடர்ச்சியாக நான்கு வருடம் தலைவியாகவும் இவர் செயற்பட்டுள்ளார். வாழைச்சேனைக்கும் சிவன்தீவுக்கும் இடையிலான படகுச் சேவையை இவரே முதன் முதலில் அரசியல் பிரமுகரின் (தேவநாயகம்) உதவியுடன் தொடக்கி வைத்துள்ளார்.

இயற்கை அனர்த்தங்களின் போதும், யுத்த காலத்திலும் அக்கிராம மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுத்துள்ளார். கிராம அபிவிருத்திச் சங்கத்தில் உறுப்பினராகவும், ஆலய பரிபாலன சபையில் உறுப்பினராகவும் இருந்து செயற்பட்டு அக்கிராம முன்னேற்றத்திற்குப் பல்வேறு வழிகளிலும் சமூக சேவை செய்துள்ளார். இப்போது வயது முதிர்வின் காரணமாக சிறு சிறு உதவிகளே அவரால் செய்ய முடிகின்றது. எப்படியாயினும் இச் சமூகசேவகியை இறைவன் அருள்பாலிப்பார் என்பதோடு இச் சமூகசேவகியைக் கௌரவிப்பதில் நாம் பெருமையடைகின்றோம்.

## திரு.காளி வீரக்குட்டி
## -சமூகசேவையாளரும், விச வைத்தியரும்



நாசிவன்தீவைப் பூர்வீகக் குடியாகக் கொண்ட காளி வீரக்குட்டி அவர்கள் 1927.03.22ஆம் திகதி சிவன்தீவில் பிறந்தார். பாடசாலை செல்லாத இவர் அனுபவப் படிப்பின் மூலம் எழுதும், வாசிக்கும் திறனைப் பெற்றுக் கொண்டார். தனது கிராமத்தை நேசிக்கும் இவர் அக் கிராம மக்களுக்கு தள்ளாத வயதிலும் சேவை செய்வது எம்மை வியப்பில் ஆழ்த்துவதாக உள்ளது. இன்றும் தேக ஆரோக்கியத்துடன் வாழும் இவர் தனது கடின உழைப்பால் உடல் உள உறுதியுடன் வாழ்கின்றார். தற்போதும் தனது சமூக மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் எனும் எண்ணப்பாட்டுடனேயே வாழ்ந்து வருகிறார்.

பத்மன் சின்னக்கண்டு என்பவரைத் தாரமாகக் கொண்ட இவர் பதினொரு பிள்ளைகளின் தந்தையாவார். சிறு வயது முதல் சமூக சேவையில் ஈடுபாடு கொண்ட இவர் ஆலய வழிபாடுகளிலும், பூசை நிகழ்வுகளிலும் அதிக ஈடுபாட்டைக் கொண்டவர். தற்போதும் தான் ஒரு சொந்தமான ஆலயத்தை நடாத்தி வருகின்றார்.

அவ்வாலயத்தின் மூலம் அப்பிரதேச மக்களுக்கு சிறந்த நாட்டு வைத்தியத்தையும் செய்து வருகின்றார். இவரின் இச் சேவையால் அப்பிரதேச மக்கள் மட்டுமன்றி வெளியிட தூர பிரதேச மக்களும் சிறந்த பயனையடைந்து வருகின்றார்கள். சிறப்பாகப் பாம்புக் கடிக்கு இலக்கானவர்களுக்குச் சிறந்த சிகிச்சை செய்து வருகிறார். இதனால் இவருக்கு விசவைத்தியர் என்ற அடைமொழியும் உண்டு.

இவரின் சேவையை மேலும் நோக்கினால்,

1. நாசிவன்தீவு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராகச் செயற்பட்டுள்ளார்.
2. 1970 காலப் பகுதியில் வாகரை, ஆலங்குளம், மேமாண்டகுளம் போன்ற வயல் பிரதேசங்களுக்கு வட்ட விதானையாகவும் செயற்பட்டுள்ளார்.
3. கை வைத்தியம், விசவைத்தியம் போன்றவற்றை இன்று வரை செய்து கொண்டிருக்கின்றார்.
4. ஆலயங்களில் பூசாரியாகவும் தமது கடமையைச் செய்து வருகின்றார்.

சிவன்தீவுக்கான முன்னோடி மனிதர்களில் ஒருவராகக் காணப்படும் இவர் தற்போது பல்வேறு அமைப்பைச் சேர்ந்தவர்களுக்கும் ஆலோசனை வழங்கும் ஓர் நபராகவும் காணப்படுகின்றார். அப்பிரதேச மக்கள் இவரை ஓர் பொக்கிசமாகவே பேணுகின்றனர். இவருடைய சமூகச் செயற்பாட்டை அவரின் புத்திரர்கள் சிலர் மேற்கொண்டு வருவதையும் காணக்கூடியதாய் உள்ளது. இச் சமூக சேவையாளருக்கு என்றும் இறைவன் ஆசீர்வதிக்க வேண்டும் என்பதோடு இவரைக் கௌரவிப்பதில் நாம் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

# வைத்தியர் திரு.மு.கணபதிப்பிள்ளை

-சமூகசேவையாளர்-



கிழக்கிலங்கையின் மட்டுமாநகரின் வடக்கே அமைந்துள்ள சித்தர் வாழ்ந்து சிவன் மகன் குடி கொண்ட சித்தாண்டி என்னும் ஊரில் முத்துப்பிள்ளை – சின்னப்பிள்ளை தம்பதியினருக்குக் கிடைத்த இளைய முத்தே திருவாளர் கணபதிப்பிள்ளை அவர்கள். இவர் 1945.04.13 இல் பிறந்து தனது இரண்டு வயதில் தந்தையை இழந்து தாயின் அரவணைப்பில் வளர்ந்து சிறுவயதில் சிறிதளவு படித்து சிறுவனாய் இருக்கும் போதே குழந்தைத் தொழிலாளியாய் வேல்முருகு ஆசிரியரிடம் வேலையும், கல்வியும், நற்பண்புகளும் பெற்று சாரதியாக அவரிடமே வேலை செய்து பின்னர் 1972ஆம் ஆண்டு காகித ஆலையிலே வேலை செய்தார். தனது 25 வயதிலே (1970 இல்) சின்னத்தம்பி லெட்சுமியைக் கரம் பிடித்து கல்குடாவிலே குடி புகுந்து பின்னர் கிராமத்தவர் மத்தியில் தைரியம் உள்ளவராகவும், நேர்மையுள்ளவராகவும், பிழைகளைத் தயக்கமின்றி தட்டிக் கேட்பவராகவும் விளங்கினார்.

இதைக் கண்ட கிராமத்தவர் கிராம அமைப்புக்களிலே தலைவராக்கினர். அத்துடன் சமூக சேவை செய்து வந்த அதேவேளை தான் சொந்தமாக கடையொன்றும் நடாத்தினார். அக்காலப் பகுதியில் கல்குடாவிலே தலைசிறந்த சித்த வைத்தியரான அமரர் சீ.தாமோதரம்பிள்ளை அவர்களின் கண்ணில் பட்ட இவர் தாமோதரம்பிள்ளைக்குச் சீடனாய் வைத்தியம் கற்று அவர் முன்னிலையில் வைத்தியம் செய்தார். அவரின் மறைவினைத் தொடர்ந்து வைத்தியத் துறையை முழுமையாகவும், முறையாகவும் செய்து மக்கள் மனதில் சிறந்த வைத்தியராகத் திகழ்ந்து கோறளைப்பற்றுப் பிரதேசத்தில் அனேகமானவர்களுக்கு மருத்துவம் செய்து பல கிராமங்கள் போற்றும் அளவிற்கு உயர்ந்து பெயர் பெற்றார். இவ்வாறிருக்கையில் தனக்குத் தெரிந்த இவ் வைத்தியத்தை தனது நான்கு பிள்ளைகளில் ஒருவருக்குக் கற்பிக்க நினைத்த வேளை அழிவொன்று உருவெடுத்த ஆழிப்பேரலையால் மருத்துவச் சொத்துக்கள் அனைத்தும் அழிந்து நிலம், புலம் இழந்து புதிய இடத்தில் குடிபுகுந்து சிறியளவில் வைத்தியம் செய்து வந்தார்.

தனது 67வது வயதையடையும் போது தனது இதயத்தில் அடைப்புகள் ஏற்பட அதனைச் சத்திர சிகிச்சை மூலம் சரி செய்து மரணத்திலிருந்து விடுபட்டு புது உருவம் எடுத்து மரண ஆதார சங்கத்தை உருவாக்கி அதிலே தலைவராகக் கடமை செய்து வந்தார். அப்போது தான் இன்றைய பிரதேச செயலகத்தின் கலாச்சாரப் பிரிவினர் கணபதிப்பிள்ளை அவர்களின் பெருமையறிந்து அவருக்கு 2014ஆம் ஆண்டு கோறளைப்பற்று பிரதேச சபையினால் கௌரவிப்பு விழாவினையும் செய்தது. இன்றும் சளைக்காதவராய் அனைவரும் மதிக்கத்தக்க வகையில் தன் தொழிலைச் செய்து சிறப்பாக வாழ்ந்து வருகின்றார்.

சித்த வைத்தியத்துறையில் சிறப்புற்றும், சமூக நிறுவனங்களில் பொறுப்புக்களையும் வகித்து தனது சமூகத்திற்கு அளப்பெரிய சேவை செய்து வரும் இவ் வைத்திய சமூக சேவையாளருக்கு இறையருள் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்தித்து இக் கௌரவிப்பு விழாவில் கௌரவிப்பதில் நாங்கள் பெரு மகிழ்ச்சியடைகின்றோம்.

## திரு.இராஜமாணிக்கம் எதிர்மன்னசிங்கம்
நாடக நடிகர், விளையாட்டு வீரர்



இராஜமாணிக்கம் தம்பதிகளுக்கு 1942.10.20இல் பிறந்தார். இவர் கல்குடா வீதி வழைச்சேனையில் வசித்து வருகின்றார். நாடகத் துறை மற்றும் விளையாட்டுத் துறையில் பல சாதனைகளைப் படைத்தவர்.

இவர் நாடகத் துறை மற்றும் விளையாட்டுத் துறைக்கு மட்டுமன்றி பல்வேறு சமூக அமைப்புக்களிலும் தன்னை ஈடுபடுத்தி ஓர் சமூகசேவையாளராகவும் தொடர்ந்து பணியாற்றி வருகின்றார்.

இவர் பிரதேசத்தில் தடம் பதித்தவை


1. வாழைச்சேனை இளைஞர் விளையாட்டு கழக போசகர்
2. முன்னாள் வாழைச்சேனை முதியோர் சங்க தலைவர்
3. முன்னாள் வாழைச்சேனை ஸ்ரீ கைலாயப்பிள்ளையார் ஆலய தலைவர்
4. வாழைச்சேனை மரண நலன்புரிச் சங்க போசகர்
5. வாழைச்சேனை விவசாய சங்க தலைவர்
6. வாழைச்சேனை ஸ்ரீ கைலாயப்பிள்ளையார் ஆலய தற்போதைய போசகர்

இச் சாதனைகளுக்காகப் பல்வேறு கௌரவங்களையும், விருதுகளையும் பெற்றுள்ளார். இவ்வாறான சேவகனுக்கு இறையருள் வேண்டி சமூகசேவையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் கௌரவப்படுத்துவதில் பெருமிதம் கொள்கின்றோம்.

தரம் குன்றாத அழகிய பவுண்
தங்க நகைகளுக்கு சிறந்த இடம்

# தங்கமஹால் ஜுவலரி

- நம்பிக்கை
- நாணயம்
- நேர்மை



உத்தரவாதத்துடன் ஓடர்
நகைகள் குறித்த காலத்தில்
செய்து கொடுக்கப்படும்

பிரதான வீதி,
வாழைச்சேனை.



அக்ஷித்தா பதிப்பகம், வாழைச்சேனை. 065-2258108